பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 03 | வள்ளுவர் ஆண்டு 2050 | ஆவணி 28 வெள்ளிக்கிழமை 13.09.2019 | கதிர் 312

**இது ரகசியம் அல்ல!**

'விடாக்கண்டன். கொடாக்கண்டன்' விவகாரத்தால் தொடர்ந்து இழுபறிப்படுகின்றது கல்முனை வடக்கு பிரதேச சபையைத் தரம் உயர்த்தும் விவகாரம்.

'ஏறச் சொன்னால் எருதுக்குக் கோபம்; இறங்கச் சொன்னால் முடவனுக்குக் பக்கம் 03

# ரணிலின் பதிலுக்கு காத்திருக்கார் சஜித்!

## தனிவழி செல்லப் பேச்சு ஆரம்பம்

கொழும்பு, செப். 13

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளராக அமைச்சர் சஜித் பிரேமதாஸவைக் களமிறக்க அந்தக் கட்சியின் தலைவரும் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க இழுத்தடிப்புச் செய்துவரும் நிலையில் சஜித்தைப் பொதுவேட்பாளராகக் களமிறக்க அவருக்கு ஆதரவான தரப்பு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. பக்கம் 03

## கல்விக்கு அதிகூடிய நிதியை ஒதுக்கீடு செய்தவன் நானே!

### மன்னாரில் ரணில் பெருமிதம்



மன்னார், செப். 13

கல்விக்கு அதிகூடிய நிதியை ஒதுக்கீடு செய்த பிரதமராகவே நான் இருக்கிறேன் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்திலும் கல்வித்துறைக்காக பல கோடி ரூபா நிதிகளை ஒதுக்க தான் பக்கம் 03

## தமிழக மீனவர்கள் பிரச்சினை: கொழும்பில் கனிமொழி பேச்சு!



கொழும்பு, செப். 13

இலங்கை வந்துள்ள தமிழக நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி, தமிழக மீனவர் பிரச்சினை குறித்து மீன்பிடி பக்கம் 03

## காணிகள் விடுவிப்பு தொடர்பில் ஆளுநர் தலைமையில் சந்திப்பு



யாழ்ப்பாணம், செப். 13

முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் படைத் தரப்பு, பொலிஸார் மற்றும் திணைக்களங்கள் வசமுள்ள பொதுமக்களின் காணிகள் விடுவிப்பு பக்கம் 03

## ஐக்கிய தேசியக் கட்சி யாப்பில் திருத்தம்

එක්සත් ජාතික පක්ෂය
ஐக்கிய தேசியக் கட்சி
UNITED NATIONAL PARTY

கொழும்பு, செப். 13

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறும் நபரே கட்சியின் தலைமைப் பதவியை வகிக்கவேண்டும் என்ற சரத்து ஐக்கிய தேசியக் கட்சியின் யாப்பிலிருந்து நீக்கப்பட்டுள்ளது.

1994 ஆம் ஆண்டிலேயே இந்தச் சரத்து நீக்கப் பட்டுவிட்டதாகவும், ஐ.தே.கவின் பக்கம் 03

## ராஜிதவுக்கு எதிராக நேற்று வைத்தியர்கள் போராட்டம்!



கொழும்பு, செப். 13

சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்னவுக்கு எதிராக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு முன்பாக நேற்று வைத்தியர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர். பக்கம் 03

## இராணுவப் பயிற்சியை மேம்படுத்த சீனாவுடன் படைத் தளபதி பேச்சு



கொழும்பு, செப். 13

இராணுவப் பயிற்சியை மேம்படுத்துவது குறித்து இலங்கைக்கான சீன தூதரகத்தின் பாதுகாப்பு இணைப்பதிகாரி சூ ஜியான்வெல் மற்றும் இராணுவத் பக்கம் 03

## பிறரை விமர்சிக்கும் தகுதி கோட்டாவுக்கு கிடையாது

### சீறுகின்றது ஜே.வி.பி.



கொழும்பு, செப். 13

அரசியல் மேடைகளில் பிறரை விமர்சிக்கும் தகைமை பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷ பக்கம் 03

## காணாமல் ஆக்கப்பட்டோருக்காக நினைவுச் சின்னங்கள் வேண்டும்!

### இலங்கை அரசிடம் கோருகிறது ஐ.நா. குழு

கொழும்பு, செப். 13

இலங்கையில் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களை நினைவு கூருவதற்கான நினைவுச் சின்னங்களை அமைக்கும் நடவடிக்கையை இலங்கை அரசு முன்னெடுக்கவேண்டும். அதற்கான நிதியுதவியை வழங்கவேண்டும் என்று வலிந்து காணாமல் ஆக்கப்படுதல் தொடர்பான ஐ.நா. குழு கோரியுள்ளது.

காணாமல்போனவர்கள் தொடர்பில் தேசிய உள்ளூர் நினைவுச் சின்னங்களை அமைப்பதற்கான நடவடிக்கைகளை இலங்கை அரசு துரிதப்படுத்தவேண்டும். அதற்கான நிதிஉதவிகளை வழங்க வேண்டும் என ஐ.நா. குழு வேண்டுகோள் விடுத்துள்ளது. பக்கம் 03

## தியாகி திலீபனின் நினைவிடம் யாழ். மாநகர சபைக்கு உரியது

### சி.வீ.கே.சிவஞானம் மாநகர முதல்வருக்குக் கடிதம்

யாழ்ப்பாணம், செப். 13

தியாகி திலீபனின் நினைவிடத்தைப் பராமரித்து நிர்வகிக்கும் உரிமையும் பொறுப்பும் யாழ்ப்பாணம் மாநகர சபைக்கே உரியதாகும் என்பதால் அதனை வேறு எவருமோ அல்லது அரசியல் கட்சியோ உரிமை கோரமுடியாது.

– இவ்வாறு தெரிவித்து பக்கம் 03

# திருமண பந்தத்தில் இணைந்தார் நாமல்







கொழும்பு, செப். 13

எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவின் மகனும் அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ நேற்றுத் திருமண பந்தத்தில் இணைந்தார்.

பிரபல வர்த்தகர் திலக் வீரசிங்க தம்பதியினரின் மகளான 22 வயதுடைய லிமினி வீரசிங்கவையே அவர் நேற்றுக் கரம் பிடித்துள்ளார்.

இவர்களின் திருமண வரவேற்பு நிகழ்வு நேற்று மாலை வீரகெட்டியவிலுள்ள கால்டன் இல்லத்தில் இடம் பெற்றது. அரசியல்வாதிகள் உட்படப் பிரபலங்கள் பலர் இந்தத் திருமண நிகழ்வில் பங்கேற்றனர். (ஐ)

# எழுக தமிழுக்கு அணி திரள அழைப்பு!

யாழ்ப்பாணம், செப். 13

எதிர்வரும் திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ் முற்றவெளியில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள எழுக தமிழ் நிகழ்வில் தமிழர் அனைவரும் அணி திரள தமிழர் மரபுரிமைப் பேரவை அழைப்பு விடுத்துள்ளது.

இது தொடர்பில் தமிழர் மரபுரிமைப் பேரவை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது –

தமிழர் தம் மரபுசார் வாழ்நிலங்கள் விளைபுலங்கள் வன்கவர்வு செய்யப்பட்டு தமிழர் மரபில் அந்நிலங்களிற்கு வழங்கப்பட்டு வந்த காரண இடுகுறி பெயர்கள் மாற்றப்பட்டு சிங்கள புனை பெயர்கள் இடப்பட்டு திட்டமிடப்பட்ட சிங்களக்குடியேற்றங்கள் கேட்பாரற்று மேற்கொள்ளப்பட்டு இதன் மூலம் இலங்கைத்தீவின் தமிழர் தாயகப் பிரதேசத்தில் தமிழரின் இனப்பரம்பல் கோலம் இன விகிதாசாரம் என்பவை திட்டமிடப்படடு சிதைக்கப்படுகின்றன.

தமிழர்களின் தொன்மை வரலாற்றின் சாட்சிகளான வணக்கத்தலங்கள் தகர்க்கப்பட்டு பௌத்த விகாரைகள் நிர்மாணிக்கப்படுவதை தடுக்க முடியாத அரசியல் கையறு நிலையில் தமிழினம் தவிக்கின்றது.

தமிழர் தாயகப் பிரதேசத்துடன் இணைந்த கடற்பரப்பில் அத்துமீறி சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபடும் சிங்கள மீனவர்களின் தான்தோன்றித்தனத்தை கட்டுப்படுத்தாது அதற்கு தூபமிடுவதாகவே அரசியந்திரம் செயற்பட்டு வருகின்றது. இதனால் தமிழ் மீனவர்களின் அன்றாட வாழ்வு வினாக்குறியாகியுள்ளது.

அரசியல் கைதிகள் கேட்பாரற்று தசாப்தங்கள் கடந்தும் சிறைக்கூடங்களில் சித்திரவதைகளை அனுபவித்து வர இறுதி யுத்தத்தின் இனப்படுகொலைஞர்கள் தண்டனைகள் எதுவுமின்றி ஆட்சி பீடத்தின் அதிகாரக் கதிரைகளை அழகுபடுத்துகின்றனர். வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான போராட்டங்கள் 931 நாட்களைக் கடந்துவிட்ட போதும் காத்திரமான முடிவுகள் எதுவும் கிடைத்துவிடாத கையறு நிலையில் இலங்கைத்தீவின் இரண்டாம் தரப் பிரஜைகளாக கட்டமைக்கப்பட்ட இன அழிப்பொன்றிற்கு உட்படுத்தப்பட்டு தான் வாழும் தன் மரபுசார் நிலத்தில் மெல்ல மெல்ல இல்லாமல் போய்க் கொண்டிருக்கின்ற அபாய நிலையின் விளிம்பில் தமிழினம் வாழ்ந்து கொண்டிருக்கின்றது.

நிரந்தரமான, காத்திரமான அரசியல் தீர்வொன்று



வழங்கப்பட்டாலன்றி இலங்கைத்தீவில் தமிழர்களின் இருப்பு வரிதாக்கப்பட்டு விடும் என்பது அரசியல் பொது .வெளியில் அனைவராலும் உணரப்பட்ட போதிலும் ஒரு தீர்வுத்திட்டம் தொடர்பில் போர் ஓய்ந்து போன கடந்த ஒரு தசாப்தம் ஆறப்போடல்கள், இளுத்தடிப்புக்கள் உடன் கடந்து போயிற்று.

எனவே தமிழர்களாகிய நாம் அனைவரும் தமிழினம் வீழ்ந்து விடாது விழ விழ எழும் என்பதை சிங்கள பேரினவாத சக்திகளிற்கு உணர்த்தவும். தமிழ் இனத்தின் நிலையையும் கோரிக்கைகளையும் சர்வதேசத்திற்கு இடித்துரைக்கவும், அனைத்து வேறுபாடுகளையும் கடந்து தமிழினம் இவ் எழுக தமிழில் ஒன்றுபட வேண்டும் என்றுள்ளது.

## கஞ்சிபானை இம்ரானின் தந்தை சகோதரன் உட்பட 6 பேர் கைது

கொழும்பு, செப். 13

போதைப்பொருள் வர்த்தக குற்றச்சாட்டில் கைதாகி விளக்கமறியலில் உள்ள கஞ்சிபானை இம்ரானின் தந்தை, சகோதரன் உள்ளிட்ட ஆறு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்திருந்தார்.

கஞ்சிபானை இம்ரானுக்குச் சாப்பாட்டுப் பொதியில் கைப்பேசி ஒன்றினை மறைத்து வைத்து கொடுக்க முற்பட்ட சம்பவம் தொடர்பிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## மகேந்திரனை நாடு கடத்தும் ஆவணங்கள் அனுப்பிவைப்பு




கொழும்பு, செப். 13

இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனை நாடு கடத்துவதற்கான ஆவணங்கள் சிங்கப்பூரில் உள்ள இலங்கைத் தூதரகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மத்திய வங்கியின் பிணை முறி மோசடி தொடர்பில் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ள மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனை, நாடு கடத்துவது தொடர்பிலான கோரிக்கைக்கு சிங்கப்பூர் அரசு நடவடிக்கை எடுப்பதாக அண்மையில் அறிவித்தது.

உரிய ஆவணங்கள் கிடைக்கப் பெற்ற பின்னர் நாடு கடத்தல் கோரிக்கை தொடர்பில் சிங்கப்பூர் சட்டத்திற்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் கூறியிருந்தார்.

இந்த நிலையில், அந்த ஆவணங்கள் சட்டமா அதிபர் திணைக்களத்தால் தயாரிக்கப்பட்ட நிலையில், அதில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அண்மையில் கையெழுத்திட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கெக்கிராவையில் வெடிப்புச் சம்பவம்



கொழும்பு, செப். 13

கெக்கிராவையில் இடம்பெற்றதாகச் சொல்லப்படும் வெடிப்புச் சம்பவம்ஒன்றுகுறித்துபொலிஸ் விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன.

கெக்கிராவை நீதிமன்ற வளாகத்தில் உள்ள களஞ்சியசாலை ஒன்றில் இந்த வெடிப்பு ஏற்பட்டுள்ளது.

இதனால் கெக்கிராவை நீதிவான் நீதிமன்றக் களஞ்சிய அறையில் ஏற்பட்ட தீயைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. (ஐ)

## ரணிலின் பதிலுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதற்காக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ,ஜே.வி.பி.,தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் இடதுசாரிக் கட்சிகளுடன் பேச்சு நடத்த சஜித் ஆதரவு அமைச்சர்கள் ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர்.

முன்னதாக நேற்று முன்தினம் அமைச்சர் ராஜிதவின் இல்லத்தில் கூடிய சஜித் ஆதரவு அமைச்சர்கள் அமைச்சர் சஜித் பிரேமதாஸவுக்கு இருக்கும் மக்கள் ஆதரவு தொடர்பான புள்ளி விவரங்களை முன்வைத்தனர் எனக் கூறப்படுகின்றது.

அதேசமயம் ரணில் தரப்பும் ரணிலுக்குச் சார்பான வகையில் சில புள்ளிவிவரங்களைத் தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும் ரணிலும் சஜித்தும் மீண்டுமொரு முறை சந்திக்க வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளபோதிலும் ரணில் அதற்கான இணக்கத்தை இதுவரை வெளியிடவில்லை எனக் கூறப்படுகின்றது. (ஐ)

## தமிழக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராஜாங்க அமைச்சர் திலிப் வெதஆராச்சியுடன் பேச்சு நடத்தினார்.

எல்லை தாண்டி மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடும்போது கைது செய்யப்பட்டோரை விடுவிப்பது குறித்தும் இங்கு பேசப்பட்டுள்ளது.

இராஜகிரியவில் உள்ள மீன்பிடித்துறை இராஜாங்க அமைச்சரின் அலுவலகத்தில் நடந்த இந்தச் சந்திப்பில் இராஜாங்க அமைச்சர் அமீரலி உட்பட்ட பலர் கலந்து கொண்டனர். (ஐ)

## காணிகள் விடுவிப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பில் வடக்கு ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் தலைமையில் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நேற்றுக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அறிவுறுத்தலுக்கு அமைவாகவே ஆளுநரால் இந்தக் கலந்துரையாடல் நேற்று முதற்கட்டமாக நடத்தப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலின் போது படைத்தரப்பு , பொலிஸார், திணைக்களங்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் ஆகியோர் ஒவ்வொருவர் அடங்கலாக மாவட்ட ரீதியிலான குழு நியமிக்கப்பட்டு அவர்கள் தனியார் காணிகளை அடையாளம் கண்டு இது தொடர்பிலான மேலதிக விவரங்களை சேகரிக்குமாறும் , அந்த விவரங்களின் அடிப்படையில் எதிர்வரும் 26ஆம் திகதி மீண்டும் கிளிநொச்சி மாவட்டத்தில் இது தொடர்பிலான கலந்துரையாடல் நடைபெறும் என்றும் ஆளுநர் இதன்போது குறிப்பிட்டார்.

வடக்கு மாகாணத்தில் படைத்தரப்பு,பொலிஸார் மற்றும் திணைக்களங்கள் வசமுள்ள பொதுமக்கள் காணிகளின் உரிமையாளர்கள் புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வசித்துவருவார்களாயின் அவர்கள் உடனடியாகத் தமது காணிகளைப் பதிவு செய்யுமாறும் ஆளுநர் இதன்போது தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில், நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, சார்ள்ஸ் நிர்மலநாதன், சாந்தி சிறிஸ்காந்தராசா, முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர்கள், கிளிநொச்சி மற்றும் வன்னிப் படைகளின் கட்டளை அதிகாரிகள் உள்ளிட்ட பிரதேச செயலாளர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோபம்' என்பார்கள். அப்படித்தான் மாறியிருக்கிறது இந்த விவகாரம்.

கல்முனை வடக்குப் பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்துவது அல்ல பிரச்சினை.

கல்முனை வடக்குப் பிரதேச செயலகமாக இப்போது வரையறை செய்யப்படும் பகுதியில் சில பிரதேசங்களை அனுமதிப்பதில்தான் பிரச்சினை. அந்தப் பிரதேசங்கள் வழமையான தற்போது தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள – பிரதேச செயலகத்துடன் விடப்பட வேண்டும், கல்முனை வடக்குப் பிரதேச சபையுடன் இணைக்கப்படக் கூடாது என்பது முஸ்லிம்களின் தீவிரமான நிலைப்பாடு.

ஆனால், அந்தப் பிரதேசங்களை விட்டுக் கொடுக்க முடியாது என்பது தமிழர்களின் கடும் போக்கு.

இந்த விடாக்கண்டன், கொடாகண்டன் விடயத்தால், இந்த விவகாரம் தீர்க்கப்படாமல் இழுபடுகின்றது என்பது எல்லோருக்கும் ஓரளவு தெரிந்ததுதான்.

இவ்விடயத்தில் இருதலைக் கொள்ளி எறும்பின் நிலையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க. இன்றைய நிலையில் இந்த இரு தரப்பாரும் அவருக்கு அத்தியாவசியமானவர்கள். ஒருதரப்புக்காக இன்னொரு தரப்பை விட்டுக் கொடுக்கவோ, பகைத்துக்கொள்ள முடியாத இக்கட்டு – அரசியல் நெருக்கடி – பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு.

இன்றைய நிலையில் அவருக்கு சுமந்திரனும் அவசியம், ஹக்கீமும் தேவை.

இந்த இரண்டு பேரையும் தற்காலிகமாக சமாளிக்கும் நகர்வுத் திட்டம் ஒன்றை அவர் முன்வைத்திருக்கின்றார்.

முஸ்லிம்களினாலும் தமது பிரதேச சபையுடன் இணைக்கப்பட வேண்டும் எனக் கோரப்படும் – சர்ச்சைக்குரிய – பிரதேசங்களை தற்போதைய நிலையில் எந்தப் பிரதேச சபையுடனும் இணைக்காமல், கல்முனை வடக்குப் பிரதேச சபையை முழு அளவிலான பிரதேச சபையாகத் தரமுயர்த்துவது என்றும் –

பின்னர் சற்றுக் காலம் தாமதித்து அந்தப் பிரதேசங்கள் குறித்துப் பேசித் தீர்மானிப்பது என்றும் –

ஒரு திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்ட நகலை தமிழர் தரப்பில் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் பார்வையிட்டுள்ளார் எனவும், அந்த நகலில் பல திருத்தங்களை அவர் பிரேரித்துள்ளார் எனவும் தெரிகின்றது.

முஸ்லிம்கள் தரப்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஹக்கீமின் மகளுக்கு நேற்றிரவு திருமணம். அந்த விடயத்தில் ஹக்கீம் பிஸி.

இரண்டொரு நாளில் அந்த சமரசத் திட்டம் ஹக்கீமிடம் சமர்ப்பிக்கப்படும் என்றும், அவரின் இணக்கம் கிடைத்தும், கல்முனை வடக்கும் பிரதேச சபையைத் தரம் உயர்த்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் கூறப்படுகின்றது.

எது, எப்படியோ கல்முனை வடக்கு பிரதேச சபை இனியும் காலம் தாமதப்படுத்தப்படாமல் தரமுயர்த்தப்பட வேண்டும்.

சர்ச்சைக்குரிய பிரதேசங்களை அந்தப் பிரதேச சபையுடன் இணைக்கும் நடவடிக்கையும் கூட, இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயம் போல இழுபடாமல், விரைந்து தீர்க்கப்பட வேண்டும்.

தேர்தல் திருவிழாவில் மூழ்கி இருக்கும் அரசியல் தலைமைகள் அந்தத் திருவிழாக்கள் முடியும் வரை சர்ச்சைக்குரிய இந்த விடயங்களில் ஈடுபட்டுத் தீர்வு காணமாட்டா என்பது நிச்சயம்.

- மின்னல் -

## ராஜிதாவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் ராஜித சேனாரத்னவின் செயற்பாடுகளால் எதிர்காலத்தில் வடக்கு, கிழக்கில் வைத்தியர்களின் அதீதத் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் ஏற்படும் என தெரிவித்தே, இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வடக்கு, கிழக்கிற்கு வைத்தியர்கள் வேண்டாமா?, வைத்தியர்கள் இடமாற்றத்தில் அரசியல் தலையீடு வேண்டாம் போன்ற பதாதைகளை ஏந்தியவாறு, இந்தப் போராட்டத்தை வைத்தியர்கள் முன்னெடுத்தனர். அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் ஏற்பாடு செய்திருந்த இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில், சுமார் 45 வைத்தியர்கள் ஈடுபட்டிருந்தனர். (ஐ)

## ராணுவப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தளபதியான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா ஆகியோர் கலந்துரையாடியுள்ளார்.

இராணுவத் தலைமையகத்தில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் இரு நாடுகளுக்கு இடையிலான உறவு முறையை மேம்படுத்தும் விடயம் தொடர்பாகவும், பயிற்சி நெறிகள் தொடர்பான விடயங்களையும் கலந்துரையாடியுள்ளனர்.

இதன்போது சீன பாதுகாப்பு இணைப்பதிகாரியினால் முன்வைக்கப்பட்ட புரிந்துணர்வுக்கும், ஒத்துழைப்புக்கும் தனது நன்றிகளை தெரிவித்த இராணுவத் தளபதி, சீன இராணுவத்துடன் உறவு முறையை மேம்படுத்துவதற்கான தனது விருப்பத்தையும் தெரிவித்துக் கொண்டார்.

இறுதியில் இவர்களது சந்திப்பை நினைவுபடுத்தும் முகமாக இவர்கள் இருவருக்கும் இடையில் நினைவுச் சின்னங்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன. (ஐ)

## காணாமல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையை கருத்தில் கொள்ளும்போது அவர்களை நினைவு கூருவதற்கான நினைவுச் சின்னங்களும் வாய்ப்புகளும் குறைந்தளவே உள்ளதாக ஐ.நா. குழு கவலை வெளியிட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை சபைக்குச் சமர்ப்பித்துள்ள அறிக்கையில் இந்த வேண்டுகோளை விடுத்துள்ள ஐ.நா குழு இலங்கையில் வலிந்து காணாமலாக்கப்பட்டமை தொடர்பான அனைத்து சம்பவங்கள் குறித்தும் உடனடி விசாரணைகளை மேற்கொண்டு நீதிமன்ற நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு இலங்கை அரசைக் கோரியுள்ளது.

இந்தச் சூழமைவில் சாட்சியங்கள் உரிய முறையில் பாதுகாக்கப்படுவது அவசியம் என தெரிவித்துள்ள ஐ.நா. குழு, கப்பம் பெறுவதற்காகப் பலவந்தமாக காணாமல் செய்யப்படுதல் இடம்பெறுவதாக வெளியாகியுள்ள தகவல்கள் குறித்தும் கவலை வெளியிட்டுள்ளது. (ஐ)

## கல்விக்கு அதிகூடிய..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தயாராக உள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

மன்னார் எருக்கலம்பிட்டி முஸ்லிம் மத்திய மகா வித்தியாலய பாடசாலையின் 75ஆவது ஆண்டு நிறைவு விழாவும் கட்டடத் திறப்பு விழாவும் நேற்று இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் கௌரவ விருந்தினராக அமைச்சர் ரிஷாத் பதியுதீனும் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நூற்றுக்கும் அதிகமாகப் பல்கலைக்கழகத்துக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் இந்தப் பிரதேசத்திலே உள்ளனர். இந்தப் பாடசாலையில் ஜே.ஆர். என்கின்ற கட்டடமொன்று உள்ளது. அதனை மீண்டும் நிர்மாணித்துத் தருவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றேன்.

கல்விக்கு அதிகூடிய நிதியை ஒதுக்கீடு செய்த பிரதமராகவே நான் இருக்கின்றேன். 1978இல் இருந்து பல்வேறு அபிவிருத்திகளைச் செய்து இந்தக் கல்வித்துறைக்கு வித்திட்டவனாக நான் இருக்கின்றேன். எதிர்காலத்திலும் இந்த கல்வித்துறைக்காக பல கோடி ரூபா நிதிகளை நான் ஒதுக்கத் தயாராக இருக்கின்றேன்.

13 வருட பாடசாலை வாழ்க்கையை மாணவர்களுக்கு வழங்கி நல்லதொரு அறிவியல் சமூகத்தை உருவாக்குவதற்காக எதிர்காலத்திலே நல்லதொரு திட்டங்களை முன்வைத்துள்ளேன்.

அதற்கு நாங்கள் அனுமதிகளை வழங்கி இருக்கின்றோம். பாடசாலையில் இருக்கக்கூடிய மாணவர்களுக்குப் பயிற்சிப் பெற்ற ஆசிரியர்கள் மூலமாகக் கல்வி மயமாக்கப்படவேண்டும். அவர்களுக்கு கல்வி புகட்டப்பட வேண்டும். 'அண்மையில் உள்ள பாடசாலை மிகச்சிறந்த பாடசாலை' என்ற தேசிய அபிவிருத்தி திட்டத்தின் கீழ் பல்வேறு அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

மேலும் கடந்த வாரம் விசேட தேவையுடையவர்களுக்கான ஒரு கல்வி நிறுவனம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதன் மூலமாக விசேட தேவையுடையவர்களுக்கும் கல்வி போய் சேர வேண்டும்.மேலும் 21 பல்கலைக்கழகங்களில் 21 பல்கலைக்கழக பீடங்கள் அண்மையிலே ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன. இவ்வாறான அபிவிருத்தி திட்டங்களை நாங்கள் முன்னெடுத்து வருகின்றோம் – என்றார். (ஐ)

## பிறரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வுக்கு கிடையாது என மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர் லால் காந்த தெரிவித்தார்.

தொழில் புரியும் மக்களின் மாநாடு நேற்று முன் தினம் சுஹததாஸ உள்ளக அரசங்கில் இடம்பெற்றது . இந்நிகழ்வில் கலந்துக் கொண்டு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கோட்டாபயவுக்கு எதிராக தேசிய நிதி மோசடி, ஜனநாயக மீறல் உள்ளிட்ட பல குற்றச்சாட்டுக்கள் இன்றும் நீதிமன்ற நிலுவையில் உள்ளண. இவ்வாறானவர்களினால் சிறந்த நாட்டை ஒருபோதும் கட்டியெழுப்ப முடியாது.

தேசிய நிதி மோசடி, ஜனநாயக மீறல் உள்ளிட்ட சர்வாதிகார ஆட்சியை முன்னெடுத்தவர்கள் மீண்டும் மக்களாணையைப் பெற்றுக் கொள்வதற்கு நாட்டின் மீது பற்றுக் கொண்டவர்கள் போல தேர்தல் பிரசாரம் செய்ய ஆரம்பித்து விட்டார்கள். கடந்த அரசு மக்களின் தேசிய நிதியைக் கொள்ளையடித்தது.

கடந்த அரசின் முறையற்ற ஆட்சிக்கு எதிராகவே 2015ஆம் ஆண்டு பாரிய போராட்டத்தின் மத்தியில் நல்லாட்சி அரசைக் கொண்டு வந்தோம். கடந்த அரசின் பிரதி விம்பமாகவே நடப்பு அரசும் தேசிய நிதியை மோசடி செய்தது. இரண்டு பிரதான கட்சிகளின் நிர்வாகமும் உழைக்கும் மக்களின் உழைப்பினை கொள்ளையடித்துள்ளது – என்றார். (ஐ)

## ஐக்கிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுச்செயலாளராகச் செயற்பட்ட காமினி அத்துக்கோரளவினால் முன்வைக்கப்பட்ட முக்கிய யோசனையின் பிரகாரமே இதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருந்தது என்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

1994 ஆம் ஆண்டு ஜனாதிபதியாகப் பதவி வகித்த சந்திரிகா அம்மையார், ஏதேனும் வழிமுறையின் கீழ் ஐ.தே.கவின் உறுப்புரிமையைப் பெற்றுவிட்டால், கட்சித் தலைமையும் பறிபோய் விடும் எனச் சட்ட ரீதியாக முன்வைக்கப்பட்ட தர்க்கத்தையடுத்தே மேற்படி சரத்து நீக்கப்பட்டுள்ளது எனவும் சிறிகொத்தா வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது.

எனவே, ஜனாதிபதி வேட்பாளராக சஜித் பிரேமதாஸ களமிறங்கி வெற்றி பெற்றால்கூட ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவியில் மாற்றம் செய்யவேண்டிய தேவை ஏற்படாது.

கட்சி தலைமைப் பதவி பறிபோய்விடும் என்ற அச்சத்தாலேயே ஜனாதிபதித் தேர்தலில் சஜித்தைக் களமிறக்குவதற்கு ரணில் விக்கிரமசிங்க தயங்குகிறார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ள நிலையிலேயே, ஐ.தே.க. தரப்பிலிருந்து மேற்படி அறிவிப்பு வெளியாகியுள்ளது. (ஐ)

## தியாகி திலீபனின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். மாநகர சபை முதல்வருக்குக் கடிதம் அனுப்பியுள்ளார் வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வீ.கே. சிவஞானம்.

இது குறித்து அவர் தனது கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:

எதிர்வரும் 26.09.2019 ஆம் திகதி தியாகி திலீபனின் நினைவு தினம் என்பதை தாங்கள் அறிவீர்கள்.

இதனையொட்டி நல்லூரில் அமைந்துள்ள தியாகி திலீபனின் நினைவிடத்தைத் துப்புரவு செய்து நினைவு தின அஞ்சலி நிகழ்வுக்கு ஏற்ற வகையில் ஏற்பாடு செய்துதவுமாறு வேண்டப்படுகிறது.

இந்த நினைவிடத் தூபி 1988 ஆம் ஆண்டில் நான் மாநகர ஆணையாளராக இருந்தபோது எமது செலவில் நிர்மாணிக்கப்பட்டது. அது அரச படைகளால் அழிக்கப்பட்டதனால் மீண்டும் 1998 இல் புனரமைக்கப்பட்டது. அதுவும் அரச படைகளால் அழிக்கப்பட்டாலும் நினைவிடத் தளம் அப்படியே உள்ளது.

ஆகவே, இந்த நினைவிடத்தை பராமரித்து நிர்வகிக்கும் உரிமையும் பொறுப்பும் யாழ்ப்பாணம் மாநகர சபைக்கே உரியதாகும் என்பதால் அதனை வேறு எவருமோ அல்லது அரசியல் கட்சியோ உரிமை கோரமுடியாது என்பதையும் இந்த சந்தர்ப்பத்தில் வலியுறுத்த விரும்புகிறேன் – என்றுள்ளது. (ஐ-07)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000,
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - https://kalaikathir.online

## தமிழராய் எழுக!

மீண்டும் ஓர் 'எழுக தமிழ்' நிகழ்வுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருக்கின்றது.

முன்னாள் முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரனை இணைத் தலைவராகக் கொண்ட தமிழ் மக்கள் பேரவையே இதற்கான அழைப்பையும் விடுத்திருக்கின்றது.

இதுவரை காலமும் முதலமைச்சர் என்ற அதிகாரத்துடன் அரசியலில் கோலோச்சிய நீதியரசர் விக்னேஸ்வரன் இப்போது 'தமிழ் மக்கள் கூட்டணி' என்ற கட்சியின் பொதுச் செயலாளர் மட்டுமே. அவரது அரசியல் ஆதிக்க எல்லை சுருங்கி விட்டது என்பது வாஸ்தவம்தான்.

அதன் காரணமாக தமது அரசியல் செல்வாக்கையும் வலுவையும் பலப்படுத்திக் கொள்வதற்காக இந்த முயற்சியை அவர் ஆரம்பித்திருக்கின்றார் என்ற ஒரு குற்றச்சாட்டு உள்ளது.

அதாவது தமதும் கட்சியினதும் தனதும் அரசியல் செல்வாக்கை வலுப்படுத்தும் ஒரு முயற்சியாக சில தரப்புகளினால் சந்தேகத்துடன் இந்த எத்தனம் பார்க்கப்படுகின்றது. நாமும் கூட இப்பத்தியில் அந்த சாரப்பட சில சந்தேகங்களை ஒரு தடவை எழுப்பியிருந்தோம்.

போதாக்குறைக்கு முன்னாள் முதல்வருடன் ஒட்டிக் கொண்டு நின்று அரசியல் செய்ய விழையும் சில பேனா பிரகிருதிகள், இந்த 'எழுக தமிழ்' நிகழ்வை ஒட்டிய ஏற்பாடு சம்பந்தமான பேரவைக் கூட்டத்தில் அப்படிப் பேசினர் என வெளிவந்த தகவல்களும் மக்கள் மனதில் – பார்வையாளர்கள் கருத்தில் – அத்தகைய சந்தேகத்தை ஏற்படுத்தி நிற்பது மறுக்கக் கூடியது அல்ல.

நீதியரசர் விக்னேஸ்வரனின் 'எழுக தமிழ்' அழைப்புத் தொடர்பில் இவ்வாறு நாமும் வேறு சில தரப்புகளும் எழுப்பிய சந்தேகம் அரசியல் விமத்தனம் என்ற சாரப்பட தமது பகிரங்க அறிக்கை ஒன்றில் விமர்சித்த முன்னாள் முதல்வர் விக்னேஸ்வரன், இந்த 'எழுக தமிழ்' நிகழ்வு தமது கட்சி சார்ந்த நிகழ்வு அல்ல என்றும் பிரகடனப்படுத்தியிருக்கின்றார்.

அவரது அந்தப் பிரகடனத்தையும் இந்த 'எழுக தமிழ்' நிகழ்வுக்கான நோக்கங்கள், இலக்குகளையும் கவனத்தில் கொள்ள வேண்டியவர்களாக தமிழ் மக்கள் உள்ளனர்.

தமிழ் மக்கள் இன்று எதிர்நோக்கும் பற்றி எரியும் பிரச்சினைகளை – சிக்கல்களை – உலகுக்கு வெளிப்படுத்தும் நோக்கத்துடனேயே இது ஒழுங்கு செய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழர் தாயகத்தில் சிங்கள, பௌத்த மயமாக்கலை உடன் நிறுத்த வேண்டும், தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட கொடூரப் போர்க் குற்றங்கள் குறித்து நீதியான விசாரணை நடத்த வேண்டும், தமிழ் அரசியல் கைதிகள் அனைவரையும் விடுதலை செய்யவேண்டும், வலிந்து காணாமலாக்கப்பட்டவர் தொடர்பில் உடனடியாக விசாரணை நடத்தப்பட வேண்டும், வடக்கு – கிழக்கில் இராணுவ மயமாக்கலை உடன் நிறுத்த வேண்டும், இடம்பெயர்ந்த மக்கள் அனைவரையும் பாரம்பரியமாக அவர்கள் வாழ்ந்த இடங்களில் மீளக் குடியேற்ற வேண்டும் என்பன போன்ற கோரிக்கைகளை முன்வைத்தே 'எழுக தமிழ்' ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

தமிழர் தாயகமான வடக்கிலும், கிழக்கிலும் தமிழும் தமிழ் மக்களும் மீண்டும் ஏற்றம் பெறுவதற்கு அவசியமான – ? மிக அவசரமான – கட்டாயமான – விடயங்களே இவை என்பதில் யாருக்கும் சந்தேகம் இருக்க முடியாது.

தமிழர் தாயகத்தில் இயங்கும் பெரும்பாலும் அனைத்துத் தமிழ்க் கட்சிகள், கட்டமைப்புகள், இயக்கங்கள் வலியுறுத்தும், பொதுவான விடயங்களை வலியுறுத்தியே 'எழுக தமிழ்' முன்னிறுத்தப்பட்டிருக்கின்றது.

இத்தகைய சூழலில் –

இந்த 'எழுக தமிழ்' நிகழ்வின் வெற்றி, தனி ஓர் அமைப்பின் அல்லது கட்சியின் சாதனையாகவும் வெற்றியாகவும் அர்த்தப்படுத்தப்பட்டு, அத்தரப்புக்கு அரசியல் வலுவூட்டுவதாக அர்த்தப்பட்டுவிடும் என்று கருதி அல்லது சந்தேகித்து சில தரப்புகளும் கட்சிகளும், அரசியல் குழுக்களும், அமைப்புகளும் இந்த முயற்சியில் ஒன்றிக்காமல் ஒதுங்கியிருக்கக் கூடும்.

ஆனால், இந்த 'எழுக தமிழ்' நிகழ்வுக்குக் காரணமாக முன் வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகள் தோற்றுப் போவது என்பது ஒட்டுமொத்தத் தமிழ் இனத்தின் தோல்வியாக அர்த்தப் படக் கூடியது என்பதை நாம் மறந்து விடக் கூடாது.

தமிழ் மக்கள் தங்களது கைவிட முடியாத – கைவிடவே கூடாத – அபிலகைளில் மெத்தனமாக இருந்து விட்டார்கள் என்ற அவப் பெயரையும், அதன் தவறான விளை வையும் 'எழுக தமிழ்' வெற்றி பெறாத சூழல் நமக்குத் தந்து விடும்.

ஆகவே 'எழுக தமிழ்' வெற்றி யாருக்கு அரசியல் சாதாகமாக மாறும் என்பதை விடுத்து, அதன் பின்னடைவு முழுத் தமிழினத்துக்குமே தோல்வியாகிவிடும் என்ற உண்மை நிலை உணர்ந்து அந்நிகழ்வுடன் ஒன்றித்துத் தமிழராய் எழுவோம்...!

# யாழ்.நீதிமன்ற மறியல் கூடத்துக்குள் சந்தேகநபர் கழுத்தை பிளேட்டால் கீறி உயிர் துறப்பு முயற்சி!

யாழ்ப்பாணம், செப். 13

2 கிராம் 400 மில்லிக்கிராம் ஹெரோய்ன் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் தொடர்ச்சியாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்தேகநபர் ஒருவர் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்ற மறியல் கூடத்துக்குள் வைத்து தனது கழுத்தை பிளேட்டால் கீறி உயிர் துறப்புக்கு முயற்சித்தார்.

இந்தச் சம்பவம் நேற்று முற்பகல் 10 மணியளவில் இடம்பெற்றது.

சந்தேகநபருக்கு எதிராக ஹெரோய்ன் போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டு பொலிஸாரால் முன்வைக்கப்பட்டுள்ளது. 2 கிராம் 400 மில்லிக்கிராம் ஹெரோய்ன் அவரது உடைமையிலிருந்து கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்துள்ளனர்.

அதனால் சந்தேகநபர் கடந்த ஜூலை 5ஆம் திகதியிலிருந்து தொடர்ச்சியாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தபோது சந்தேகநபரின் விளக்கமறியலை நீடித்து யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் ஏ.பீற்றர் போல் உத்தரவிட்டார்.

இந்த நிலையில் சிறைச்சாலை உத்தியோகத்தர்களால் சந்தேகநபர் நீதிமன்ற மறியல் கூடத்துக்குள் தடுத்து வைக்கப்பட்டார்.

அதன்போதே தான் வைத்திருந்த பிளேட் போன்ற கூரிய ஆயுதத்தால் சந்தேகநபர் தனது கழுத்தைக் கீறிக் காயத்தை ஏற்படுத்தினார்.

அவரைச் சிகிச்சைக்காக அழைத்துச் செல்லச் சிறைச்சாலை வாகனம் வர சுமார் அரை மணி நேரம் தாமதமானது. அதனால் சந்தேகநபரின் தாயார் நீதிமன்றக் கட்டடத் தொகுதிக்குள் பெரும் சத்தமிட்டுக் குரல் எழுப்பினார். எனினும் பொலிஸார் அவரை நீதிமன்ற வளாகத்துக்கு வெளியே அழைத்துச் சென்று நீதிமன்றில் அமைதியை ஏற்படுத்தினர்.

இதேவேளை, சந்தேகநபரை தொடர்ச்சியாக விளக்கமறியலில் வைக்கும் நோக்குடன் ஹெரோய்னை அவரது உடைமைக்குள் திணித்து சோடிப்பு வழக்கைத் தாக்கல் செய்தனர் என்று சந்தேகநபரின் உறவினர்கள் குற்றஞ்சாட்டினர்.

(ஐ - 07)

# வாழ்வக அன்னை கலாநிதி அன்னலட்சுமி நினைவு நாளும் நினைவுப் பேருரையும்







யாழ்ப்பாணம், செப். 13

வாழ்வக அன்னை கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பி நினைவு நாளும் சுன்னாகம் வாழ்வக செல்வா மண்டபத்தில் வாழ்கத் தலைவர் ஆறுமுகம் ரவீந்திரன் தலைமையில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் பி.சனத் பூஜித அன்னையின் சிலைக்கு மாலை அணிவித்தார். இதனைத் தொடர்ந்து மங்கல விளக்கேற்றலுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

இதன் போது மாணவர்களின் இறைவணக்கத்தைத் தொடர்ந்து வரவேற்பு நடனமும் இடம்பெற்றது.

தொடர்ந்து மாணவர்களுக்கான மூக்குக் கண்ணாடிகள் உள்ளிட்ட உதவிகளும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் விருந்தினர்களாக பரீட்சைத் திணைக்களத்தின் பிரதிப் பரீட்சை ஆணையாளர் செல்வத்துரை பிரணவதாசன், வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் நடராசா காண்டீபன். மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி அதிபர் கமலராணி கிருஷ்ணபிள்ளை, கிறீன் கிறாஸ் நிர்வாக முகாமையாளர் தியாகராசா ஜெகசீலன் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர்.

(ஐ - 07)

## நிசங்க சேனாதிபதி உள்ளிட்ட 13 பேருக்கு அழைப்பாணை

கொழும்பு, செப். 13

அவன்கார்ட் மோசடி தொடர்பான விசாரணைகளுக்காக நீதிமன்றில் முன்னிலையாகுமாறு அந்த நிறுவனத்தின் தலைவர் நிசங்க சேனாதிபதி உள்ளிட்ட 13 பேருக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் அவர்கள் எதிர்வரும் 27 ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகவேண்டும் என நிரந்தர நீதாய மேல் நீதிமன்றம் அழைப்பு விடுத்துள்ளது.

அத்தோடு அந்தத் தினத்தில், அவன்கார்ட் வழக்கு தொடர்பாக சட்டமா அதிபர் தாக்கல் செய்த 7,573 குற்றச்சாட்டுகள் அடங்கிய குற்றப் பத்திரிகைகள், பிரதிவாதிகளிடம் ஒப்படைக்கப்பட உள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

**நாளை** 14.09.2019 சனிக்கிழமை

நட்சத்திரம்: பூரட்டாதி மு.இ 11.49 வரை
திதி : பூரணை மு.ப 10.14 வரை

இராகுகாலம் : 9.03 - 10.33
சுப நேரம் : 3.03 - 4.33

மஹாளய பஷாரம்பம்

# எழுக தமிழ் - 2019

## செப்ரெம்பர் -16 முற்றவெளி நோக்கி

- ★ சிங்கள, பௌத்த மயமாக்கலை உடனடியாக நிறுத்து
- ★ சர்வதேச போர்க்குற்ற விசாரணையை நடத்து
- ★ தமிழ் அரசியல் கைதிகள் அனைவரையும் விடுதலை செய்
- ★ வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் உடனடி விசாரணை நடத்து
- ★ வடக்கு-கிழக்கில் இராணுவ மயமாக்கலை நிறுத்து
- ★ இடம்பெயர்ந்த அனைவரையும் அவர்களது பாரம்பரிய இடங்களில் மீளக்குடியமர்த்து என்ற கோசங்களுடன் எழுக தமிழாய் அணிதிரள்வோம் வாரீர்!

**இனப்பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வு தமிழ் மக்கள் பேரவையின் தீர்வுத்திட்டமே. எழுக தமிழாய் எழுவோம் வாரீர்!!**

எழுக தமிழ்

ELUKATHAMIL2019

16-09-19 | காலை 9.00 யாழ் முற்றவெளி நோக்கி

முள்ளிவாய்க்கால் படுகொலைகளை நிகழ்த்திய அகந்தையோடு சிங்கள பௌத்த விரிவாக்கமானது முன்னெப்போதும்இல்லாதளவில்முன்னெடுக்கப்படுகின்றது.

தமிழ்மண்சிதைவுற்று,தமிழரின் குடித்தொகை வெகுவாக வீழ்ச்சியடைந்துள்ளது.வடக்கில்இருந்து கிழக்கைப் பிரித்து தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.தோற்கடிக்கப்பட்ட மக்கள்என்றமனநிலையுடன்தமிழ் மண் அரசியற் சகதிக்குள் மூழ்கியுள்ளது.

தமிழ் மக்கள் எதிரியின் காலடியில் சிக்குண்டு கிடக்கின்றனர். நம்பிக்கையற்ற நடை பிணங்களாய் ஈழத்தமிழ் மக்கள் அரசியற் பாலை வனத்தில் தள்ளப்பட்டுள்ளனர். தமிழ் மக்கள் தமது உரிமைக்கான போராட்டங்களை ஆரம்பித்த காலத்தை விடவும், அதற்கான தேவையும், பரப்பும், நியாயமும் இன்று மிகப் பெரியதாகியுள்ளன.

சர்வதேசத்தின் முன் நாம் வைத்த கோரிக்கைகளும் புவிசரர் அரசியலில் பந்தாடப்படுகின்றன. நம்பிக்கை இழந்த எம்மக்கள் தாமே தலைமையேற்றுபோராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். ஒருங்கிணைத்து வலுப்படுத்த எழுக தமிழாய் அணிதிரள்வோம்.

**மேலதிக தகவல்களுக்கும், தொடர்புகளுக்கும்:**
**தமிழ் மக்கள் பேரவை,**
**61, பலாலி வீதி, கந்தர்மடம்,**
**யாழ்ப்பாணம்.**

**எம் மக்களின் கோரிக்கைகளை முன்நிறுத்தி தேசமாய் அணி திரள்வோம்!!**

# தமிழ் மக்கள் பேரவை

www.elukathamil.com | info@elukathamil.com | tamilpeoplescouncil | 0760025080

# ‘சிறை’ வைக்கப்பட்ட ஆடுகள்!




இரண்டு ஆடுகளை காவல்துறையினர் பிடித்து நேற்றுமுன்தினம் இரவு முழுவதும் காவல்நிலையத்தில் கட்டி வைத்திருந்தனர்.


தெலங்கானாவில் மரம் வளர்ப்பு திட்டத்தை ஊக்குவிக்கும் வகையில் ஹரிதா ஹரம் என்ற திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. அந்த திட்டத்தின் கீழ் நடப்பட்ட செடிகளை தின்றதாக இந்த ஆடுகள் மீது புகார் கொடுத்துள்ளது ஹசுராபாத் மாநகர சபை.

ஹரிதா ஹரம் திட்டத்தின் கீழ் நடப்பட்ட மரக் கன்றுகளை ஆடு மாடுகள் மேய்ந்து விடுவதால் அதிருப்தியில் இருந்த சமூக அமைப்பு ஒன்று, அவ்வாறு மரக்கன்றுகளை மேய்ந்து கொண்டிருந்த இரண்டு ஆடுகளைப் பிடித்து காவல்நிலையத்தில் ஒப்படைத்துள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு முழுவதும் காவல்நிலையத்திலேயே அந்த ஆடுகள் கட்டி வைக்கப்பட்டிருந்தன. அதன் உரிமையாளர் காவல்நிலையத்துக்கு வரவழைக்கப்பட்டார். அவருக்கு ரூ.1000 அபராதமாக விதிக்கப்பட்டு, காவல்துறையினர் எச்சரித்து அனுப்பினர்

# கட்சியை விட்டுச் சென்றவர்கள் விரைவில் தவறை உணர்வார்கள்

## டி.டி.வி. தினகரன் கூறுகிறார்



மொரப்பூர், செப். 13

கட்சியை விட்டு சென்றவர்கள் செய்த தவறை உணரும் நேரம் விரைவில் வரும் என்று அ.ம.மு.க. பொதுச்செயலாளர் டி.டி.வி. தினகரன் தெரிவித்தார்.

முன்னாள் அமைச்சர் பி.பழனியப்பன் இல்லத் திருமண விழாவில் அ.ம.மு.க. பொதுச்செயலாளர் டி.டி.வி. தினகரன் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்.

அவர் தெரிவித்தவை வருமாறு:-

தர்மபுரி மாவட்டம் முழுவதும் கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்டது. தற்போது இங்கு மழை பெய்து உள்ளது.

அம்மா மக்கள் முன்னேற்ற கழகத்திலிருந்து சிலர் பிரிந்து சென்று வேறு கட்சிக்குச் சென்று உள்ளனர். கட்சியைவிட்டு சென்ற அவர்கள் செய்த தவறை உணரும் நேரம் விரைவில் வரும். அ.ம.மு.க.வில் உள்ளவர்களுக்கு வருங்காலத்தில் நல்ல எதிர்காலம் உள்ளது.

முன்னாள் அமைச்சரும், கட்சியின் துணைப் பொதுச்செயலாளருமான பழனியப்பன் கட்சியின் வளர்ச்சிக்கு பக்க பலமாக இருந்து வருகிறார். இன்று திருமணம் காணும் மணமக்கள் என்.ஏ. விஜய்ஆனந்த் எம்.பி.யாழினி வாழ்க்கையில் எல்லா வளமும் பெற்று சிறப்புடன் வாழ வேண்டும் - என்றார்.

# மகாராஷ்டிரா விபத்து; ஆறு பேர் உயிரிழப்பு







புனே, செப், 13

மகாராஷ்டிராவில் நேற்று அதிகாலை கொள்கலன் லொறி மீது பஸ் மோதிய விபத்தில் 6 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். 15இற்கும் மேற்பட்ட பயணிகள் படுகாயம் அடைந்தனர்.

மும்பையில் இருந்து கர்நாடகா மாநிலம் பெலகாவுக்கு பயணிகளை ஏற்றிக் கொண்டு தனியார் பஸ் நேற்று அதிகாலை 5 மணியளவில் மகாராஷ்டிரா மாநிலம் சுபாரா மாவட்டத்துக்குட்பட்ட மாசேவ் கிராம பகுதியில் எதிர்பாராத விதமாகச் சாலையில் முன்னால் சென்ற கொள்கலன் லொறி மீது பயங்கரமாக மோதியது.

இதனால் பஸ்ஸுக்குள் தூங்கிக் கொண்டிருந்த பயணிகள் பதற்றம் அடைந்தனர். இந்த விபத்தில் பஸ் சாரதி உட்பட 6 பேர் பரிதாபமாக இறந்தனர். 15இற்கும் மேற்பட்ட பயணிகள் படுகாயம் அடைந்தனர்.

சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் காயம் அடைந்தவர்களை மீட்டு வைத்தியசாலையில் சேர்த்தனர். இதில் 3 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

# கைபேசியில் பேசிக்கொண்டே படுக்கையில் அமர்ந்த பெண் பாம்புகள் கடித்து உயிரிழப்பு

புதுடில்லி, செப். 13

கைத்தொலைபேசியில் பேசிக்கொண்டே படுக்கையில் அமர்ந்தவர் பாம்புகள் கடித்துப் பலியானார்.

உத்தரபிரதேச மாநிலம் கோரக்பூர் மாவட்டம் ரியனவ் கிராமத்தைச் சேர்ந்தவர் ஜெய்சிங் யாதவ். இவரது மனைவி கீதா. ஜெய்சிங் யாதவ் தாய்லாந்தில் பணிபுரிந்து வருகிறார்.

சம்பவத்தன்று கீதா தனது கணவனுடன் கைத்தொலைபேசியில் பேசியபடியே சென்று அவர் தனது படுக்கையில் அமர்ந்துள்ளார். அப்போது படுக்கையில் இருந்த பாம்புகள் அவரை ஆவேசமாகக் கடித்துள்ளன. இதில் அவர் மயக்கம் அடைந்தார். உடனடியாக உறவினர்கள் அவரை மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர். ஆனால் சிகிச்சை பயனின்றி அவர் உயிரிழந்தார்.

உறவினர்கள் மற்றும் அயலவர்கள் கீதாவின் வீட்டில் உள்ள படுக்கை அறைக்குச் சென்று பார்த்தபோது, பாம்புகள் இன்னும் படுக்கையில் விளையாடிக் கொண்டிருந்தன. கோபமடைந்த அவர்கள் பாம்புகளை அடித்துக் கொன்றனர்.

கால்நடை நிபுணர்கள் கூறுகையில், பாம்புகள் மீது அந்தப் பெண் அமர்ந்தபோது பாம்புகள் இனச்சேர்க்கையில் ஈடுபட்டு இருந்தன எனக் கூறினார். (ஜ)

# ஆயுதங்கள், வெடிபொருள்கள் ஏற்றிச் சென்ற லொறி பறிமுதல்



புதுடில்லி, செப். 13

ஜம்மு காஷ்மீரில் ஆயுதங்கள் மற்றும் வெடிபொருள்களுடன் வந்த லொறி பறிமுதல் செய்யப்பட்டுள்ள சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஜம்மு காஷ்மீருக்கான சிறப்பு அந்தஸ்து அளித்து வந்த அரசமைப்புச் சட்டத்தின் 370 ஆவது பிரிவு ரத்து மற்றும் அந்த மாநிலத்தை இரு யூனியன் பிரதேசங்களாக பிரிக்கும் முடிவுகளை மத்திய அரசு கடந்த மாதம் 5ஆம் திகதி அறிவித்தது.

இதைத் தொடர்ந்து, காஷ்மீர் பள்ளத்தாக்கில் அசம்பாவித சம்பவங்களைத் தவிர்ப்பதற்காக, பல்வேறு கட்டுப்பாடுகள் அமுல்படுத்தப்பட்டன. நிலைமை மேம்படுவதைப் பொறுத்து, கட்டுப்பாடுகள் அவ்வப்போது தளர்த்தப்பட்டு வருகின்றன.

காஷ்மீருக்கு அளிக்கப்பட்டு வந்த சிறப்பு அந்தஸ்து ரத்து செய்யப்பட்டதை விரும்பாத பாகிஸ்தான் இவ்விவகாரத்தை சர்வதேச பிரச்சினையாக்க முயற்சி மேற்கொண்டு வருகிறது. ஆனால் அதற்கு எவ்வித ஆதரவும் கிடைக்கவில்லை. இதனால், இந்தியாவுடன் பதற்றமான சூழல் உள்ளதுபோன்ற தோற்றத்தை ஏற்படுத்தவும், காஷ்மீர் பள்ளத்தாக்கில் பயங்கரவாதச் செயல்களைத் தூண்டிவிடவும் பாகிஸ்தான் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. எனவே, காஷ்மீரில் பாதுகாப்புப் படையினர் தீவிர சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் ஜம்மு காஷ்மீரின் கத்துவா பகுதியில் வந்த லொறியை பாதுகாப்புப் படையினர் சோதனை மேற்கொண்டனர். இந்த சோதனையின்போது லொறியில் ஆயுதங்கள் மற்றும் வெடிபொருள்கள் இருந்தமை கண்டு பிடிக்கப்பட்டது. இதையடுத்து அவற்றை பறிமுதல் செய்த பாதுகாப்புப்படையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# டிரம்ப்புக்கு என் மீது காதல்!

## ஹொலிவூட் நடிகர் ஆர்னல்ட் கிண்டல்



வொஷிங்டன், செப். 13

டிரம்ப் என் மீது காதல் கொண்டிருக்கிறார் அவர் என்னைப் போல் இருக்க விரும்புகிறார் என ஹொலிவூட் நடிகர் ஆர்னல்ட் தெரிவித்துள்ளார்.

ஹொலிவூட் திரையுலகின் பிரபல நடிகரான ஆர்னல்ட் ஸ்வார்ஸ்னேக்கர், அரசியலிலும் தீவிர ஈடுபாடு கொண்டவர். அமெரிக்க ஜனாதிபதி டிரம்பின் குடியரசுக் கட்சியைச் சேர்ந்த இவர், 2003 முதல் 2011ஆம் ஆண்டு வரை கலிபோர்னியா மாகாணத்தின் ஆளுநராக இருந்துள்ளார்.

ஒரே கட்சியைச் சேர்ந்தவர்கள் என்றபோதும் டிரம்ப்புக்கும், ஆர்னல்ட்டுக்கும் இடையே கருத்தியல் ரீதியாக மோதல் போக்கு நீடித்து வருகிறது. குடியுரிமை உட்பட டிரம்பின் சர்ச்சைக்குரிய திட்டங்களை ஆர்னல்ட் கடுமையாக விமர்சித்தார். அதே போல் டிரம்ப்பும், ஆர்னல்டின் கருத்துகளுக்கு பலமுறை கிண்டலாக பதிலளித்திருக்கிறார்.

இந்த நிலையில், அமெரிக்காவைச் சேர்ந்த பிரபல இதழ் ஒன்று அண்மையில் ஆர்னல்டிடம் பேட்டி கண்டது. அப்போது அவரிடம், உங்களுக்கும், டிரம்ப்புக்கும் இடையிலான பகைமையின் காரணம் என்ன? உங்கள் மீது அவர் கூறும் விமர்சனங்களுக்கு நீங்கள் என்ன பதில் கூறுகிறீர்கள்? என்று கேட்கப்பட்டது.

அதற்கு ஆர்னல்ட், டிரம்ப் என் மீது காதல் கொண்டிருக்கிறார். அவர் என்னை போல் இருக்க விரும்புகிறார். இதுதான் உண்மை. மக்கள் அமெரிக்காவை எவ்வளவு தூக்கி வீசினாலும், மக்கள் ஜனாதிபதியை பார்த்து எவ்வளவு சிரித்தாலும் உலகெங்கிலும் உள்ள மக்கள் அமெரிக்கா வரவே விரும்புகிறார்கள். ஏனென்றால் அவர்களுக்கு நன்கு தெரியும். ஒரு மனிதர், ஒரு ஜனாதிபதியால் அமெரிக்கா மாறிவிடாது என பதிலளித்தார்.

# இரட்டை கோபுர தாக்குதல் நினைவு தினம் அனுசரிப்பு



அமெரிக்காவில் இரட்டை கோபுரமிஹ் தாக்குதல் நினைவு தினம் நேற்றுமுன் தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

அமெரிக்காவில் கடந்த 2001ஆம் ஆண்டு செப்ரெம்பர் 11ஆம் திகதி, அல் கொய்டா பயங்கரவாதிகள் விமானங்களைக் கடத்தி நியூயோர்க்கில் உள்ள உலக வர்த்தக மையத்தின் இரட்டைக் கோபுரக் கட்டடம் மற்றும் ராணுவத் தலைமையகமான பென்டகன் மீது மோதி வெடிக்கச் செய்தனர்.

உலகையே உலுக்கிய இந்தத் தாக்குதலில் 3 ஆயிரத்துக்கும் அதிகமானோர் கொன்று குவிக்கப்பட்டனர். அத்துடன் இந்தத் தாக்குதல் பயங்கரவாதத்தின் கோர முகத்தை உலகுக்கு எடுத்துக்காட்டுவதாக அமைந்தது.

இந்த நிலையில் அமெரிக்காவின் இரட்டைக் கோபுரம் மற்றும் பென்டகன் தாக்கப்பட்டதின் 18ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்றுமுன்தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

இதையொட்டி அமெரிக்காவில் உள்ள அனைத்து அரசு நிறுவனங்கள் மற்றும் அலுவலகங்கள், பள்ளி, கல்லூரிகள் உள்ளிட்டவற்றிலும் அமெரிக்க தேசியக்கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடும்படி ஜனாதிபதி டிரம்ப் உத்தரவிட்டார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில், “2001, செப்ரெம்பர் 11 தாக்குதலில் உயிர்நீத்த ஒவ்வொருவருக்கும் மரியாதை செலுத்தும் விதமாக அமெரிக்க தேசியக்கொடியை அரைக்கம்பத்தில் பறக்க விடுவோம்” என குறிப்பிட்டிருந்தார்.

அதன்படி நேற்றுமுன்தினம் நாடு முழுவதும் அமெரிக்க தேசியக்கொடிகள் அரைக் கம்பத்தில் பறக்கவிடப்பட்டன.

# சீன இறக்குமதிப் பொருள்களுக்கு கூடுதல் வரி விதிப்பு ஒத்திவைப்பு

## அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் அறிவிப்பு

சீன இறக்குமதி பொருள்களுக்கு விதிக்கப்பட்ட கூடுதல் வரி விதிப்பை 2 வாரங்களுக்கு தள்ளி வைப்பதாக அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் அறிவித்துள்ளார்.

உலகின் இரு பெரும் பொருளாதார நாடுகளான அமெரிக்கா மற்றும் சீனா இடையே ஓர் ஆண்டுக்கும் மேலாக வர்த்தகப் போர் நீடிக்கிறது.

இறக்குமதி செய்யப்படும் ஒவ்வொரு பொருள்களுக்கும், எவ்வளவு வரி விதிப்பது என்பது தொடர்பாக இரு நாடுகளுக்கு இடையில் ஒப்பந்தம் கையெழுத்தாகாததே இதற்குக் காரணம். இதனால் இரு நாடுகளும், இறக்குமதி செய்யப்படும் பொருள்கள் மீது மாறி மாறி கூடுதல் வரி விதித்து வருகின்றன.

இந்த நிலையில், வர்த்தகப் போர் தொடங்கியதில் இருந்து முதல் முறையாக அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் இறால், பண்ணை விலங்குகளுக்கான மீன் உணவு, புற்றுநோய்க்கான மருந்து போன்ற 16 வகை பொருள்களுக்கு சீனா வரிவிலக்கு அளித்துள்ளது.

இந்த வரிவிலக்கானது எதிர்வரும் 17ஆம் திகதி அமுலுக்கு வரும் என்றும், ஓர் ஆண்டுக்கு அமுலில் இருக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இந்த 16 வகை பொருள்களில் 12 பொருள்களுக்கு ஏற்கனவே வரி செலுத்தியவர்கள் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம் என்றும், இதர 4 பொருள்களுக்கு செலுத்தப்பட்ட வரிப்பணம் திரும்பக் கிடைக்காது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் சில அமெரிக்கப் பொருள்களுக்கு வரிவிலக்கு அளிப்பது குறித்து பரிசீலித்து வருவதாகவும் சீன வரிவிதிப்பு ஆணையம் தெரிவித்துள்ளது. சீனாவில் இருந்து இறக்குமதியாகும் 25 ஆயிரம் கோடி டொலர் மதிப்பிலான பொருள்களுக்கு 25 சதவீதத்தில் இருந்து 30 சதவீதமாக வரி ஒக்ரோபர் முதலாம் திகதி முதல் உயர்த்தப்படுவதாக டிரம்ப் ஏற்கனவே அறிவித்திருந்தார்.

இந்த நிலையில் சீனாவில் 70வது தேசிய தினம் ஒக்ரோபர் முதலாம் திகதி கொண்டாட இருப்பதால், கூடுதல் வரி விதிப்பை தள்ளி வைக்க வேண்டும் என்று சீனாவின் துணை பிரதமர் லியுஜி அமெரிக்காவிடம் கோரிக்கை வைத்திருந்தார்.

அதனை ஏற்று நல்லெண்ண நடவடிக்கையாக கூடுதல் வரி விதிப்பு ஒக்ரோபர் முதலாம் திகதிக்குப் பதில் ஒக்ரோபர் 15 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் என்று டிரம்ப் அறிவித்துள்ளார்.

அமெரிக்கா சீனா நாடுகளின் பிரதிநிதிகள் இந்த மாத மத்தியில் வொஷிங்டனில் வர்த்தக ஒப்பந்தம் தொடர்பாக பேச்சு நடத்த இருக்கும் நிலையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து டிரம்ப் தனது ட்விட்டரில் கூறி இருப்பதாவது:

சீனாவின் துணைப் பிரதமர் லியு ஹீவின் வேண்டுகோளின் பேரிலும், சீன மக்கள் குடியரசு அவர்களின் 70ஆவது ஆண்டு விழாவைக் கொண்டாடுவார்கள் என்பதாலும் ஒக்ரோபர் முதலாம் திகதி, 250 பில்லியன் டொலர் மதிப்புள்ள பொருள்களின் (25% முதல் 30% வரை) அதிகரித்த வரிகளை ஒக்ரோபர் முதலாம் திகதி முதல் ஒக்ரோபர் 15ஆம் திகதி வரை தள்ளி வைக்க நல்ல விருப்பத்தின் அறிகுறியாக நாங்கள் ஒப்புக் கொண்டுள்ளோம் எனக் கூறி உள்ளார்.

# தடையை மீறி விளையாட்டு மைதானத்துக்குள் சென்ற வழக்கு: தண்டனைக்கு பயந்து, நீதிமன்றத்தில் பெண் தீக்குளித்துச் சாவு!

தெஹ்ரான், செப். 13

தடையை மீறி விளையாட்டு மைதானத்துக்கு சென்ற வழக்கில் கைது செய்யப்பட்ட பெண், தண்டனைக்குப் பயந்து, நீதிமன்றத்துக்கு உள்ளேயே தீக்குளித்து உயிரிழந்தார்.

ஈரானில் பெண்களுக்கு பல்வேறு கட்டுப்பாடுகள் உள்ளன. குறிப்பாக ஆண்கள் பங்கேற்கும் உதைபந்து உள்ளிட்ட விளையாட்டு போட்டிகளை மைதானத்துக்கு சென்று பார்க்கப் பெண்களுக்கு அனுமதி கிடையாது. இதனை மீறும் பெண்கள் கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்படுவார்கள்.

இந்த தடையை நீக்கி பெண்களையும் உதைபந்துப் போட்டிகளில் பார்வையாளர்களாக அனுமதிக்கவேண்டும் என சர்வதேச உதைபந்து கூட்டமைப்பு ஈரானை பல ஆண்டுகளாக வலியுறுத்தி வருகிறது.

இந்த நிலையில், கடந்த மார்ச் மாதம் தலைநகர் தெஹ்ரானில் உதைபந்துப் போட்டி நடைபெற்றது.

இதில் தனக்கு விருப்பமான ஈரானின் ‘எஸ்டேக்லால்’ அணி விளையாடியதால் இந்த ஆட்டத்தை நேரில் பார்க்கவேண்டுமென சஹர் கொடயாரி (வயது 30) என்ற பெண் நினைத்தார்.

இதற்காக அவர் ஆண் போல் வேடமிட்டு மைதானத்துக்குச் சென்றார். ஆனால் மைதானத்தில் இருந்த பாதுகாவலர்கள் அவரைப் பெண் என அடையாளம் கண்டு விட்டனர்.

இதையடுத்து, தடையை மீறி மைதானத்துக்குள் நுழைய முயன்ற குற்றச்சாட்டில் அவர் கைது செய்யப்பட்டார். சிறையில் அடைக்கப்பட்ட 3 நாள்களுக்கு பிறகு அவர் பிணையில் விடுவிக்கப்பட்டார். இந்த நிலையில், சஹர் கொடயாரி மீதான வழக்கு டெஹ்ரான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது. இதற்காக அவர் நீதிமன்றத்திற்கு வந்தார்.

ஆனால் குடும்ப பிரச்சினை காரணமாக நீதிபதி பணிக்கு வராததால் விசாரணை ஒத்திவைக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. இதையடுத்து, சஹர் கொடயாரி நீதிமன்றத்தில் இருந்து புறப்பட்டுச் சென்றார்.

ஆனால் அவர் தனது கைத்தொலைபேசியை நீதிமன்றத்தில் மறந்து வைத்து விட்டார். அதை எடுப்பதற்காக அவர் மீண்டும் நீதிமன்றுக்கு வந்தார்.

அப்போது அங்கிருந்த சிலர் சஹர் கொடயாரி மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டால் அவருக்கு 6 மாதம் முதல் 2 ஆண்டுகள் வரை சிறை தண்டனை கிடைக்கும் என பேசிக்கொண்டிருந்தனர். இதனை கேட்டு சஹர் கொடயாரி அச்சம் அடைந்தார்.

ஒரு கட்டத்தில் அவர், சிறைக்கு சென்று கஷ்டப்படுவதை விட உயிரை மாய்த்துக் கொள்வது நல்லது என்ற முடிவுக்கு வந்தார். இதையடுத்து நீதிமன்றத்திற்குள்ளேயே அவர் தனது உடலில் தீவைத்துக்கொண்டார்.

இதனால் அங்கு பெரும் பதற்றம் உருவானது. அக்கம்பக்கத்தில் இருந்தவர்கள் சஹர் கொடயாரி உடலில் எரிந்த தீயை அணைத்து, அவரை மீட்டு மருத்துவமனையில் அனுமதித்தனர்.

90 சதவீத தீக்காயங்களுடன் சிகிச்சைப்பெற்று வந்த சஹர் கொடயாரி, சிகிச்சை பலனின்றி பரிதாபமாக இறந்தார். இந்தச் சம்பவம் குறித்து விசாரணை நடத்த அந்நாட்டின் பெண்கள் மற்றும் குடும்ப விவகார துறை துணை தலைவர் மசூமெஹ் எப்டெக்கர் உத்தரவிட்டுள்ளார்.

# கனடா நாடாளுமன்று கலைப்பு பிரதமர் ஜஸ்டின் ருடே அதிரடி!

கனடா நாடாளுமன்றத்தைக் கலைத்து பிரதமர் ஜஸ்டின் ருடே உத்தரவிட்டுள்ளார்.

கனடா பிரதமராக ஜஸ்டின் ருடே (வயது 47) இருந்து வருகிறார். அவரது அரசின் மீது கடந்த பெப்ரவரியில் ஊழல் குற்றச்சாட்டு எழுந்தது. லாவலின் என்ற பொறியியல் நிறுவனத்துடன் தொடர்புடைய ஊழல் குற்றச்சாட்டு பற்றிய வழக்கில், நீதிமன்றத்திற்கு வெளியே சமரசம் ஏற்படுத்தி கொள்ள, அந்த நாட்டின் சட்டமா அதிபரான ஜோடி வில்சனுக்கு, ருடே மற்றும் மூத்த அரசு அதிகாரிகள் நெருக்கடி கொடுத்தனர் என குற்றச்சாட்டு கூறப்பட்டது.

இது அந்நாட்டு அரசியலில் புயலைக் கிளப்பியது. அரசில் உயர்மட்டத்தில் இருந்த பலர் ராஜினாமா செய்ய நேர்ந்தது. இந்த நிலையில், ருடே கனடா நாடாளுமன்றத்தை நேற்றுக் கலைத்தார். இதனால் தேர்தல் பிரசாரம் சூடு பிடிக்க உள்ளது. 2ஆவது முறையாக ஆட்சியை பிடிக்கும் முனைப்பில் அவர் இருக்கிறார். (ஐ)



யூ.எல். மப்றூக்
பி.பி.ஸி தமிழ்

# முன்னாள் பெண் புலிகளின் துயர் மிகுந்த வாழ்வு!

இலங்கையில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் உயிர்ப்புடன் இருந்தபோது, அந்த இயக்கத்தின் அநேகமான துறைகளில், ஆண் உறுப்பினர்களுக்கு நிகராக பெண் உறுப்பினர்களும் இயங்கிக் கொண்டிருந்தார்கள்.

சண்டைக் களங்களில் பங்கேற்ற விடுதலைப் புலி களின் அணிகளுக்குப் பெண்களும் தலைமையேற்றி ருந்தனர்.

இருந்தபோதும், இறுதி யுத்தத்தின் பின்னர் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அழிவுக்குப் பிறகு, அந்த இயக்கத்தின் முன்னாள் உறுப்பினர்கள் வாழ்க்கையை எதிர்கொள்வதற்காக பெரும் கஷ்டங்களையும், சவால்களையும் எதிர்கொண்டு வருகின்றனர் எனக் கூறப்படுகிறது.

அந்த வகையில், விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முன்னாள் பெண் உறுப்பினர்களின் நிலை தற்போது எவ்வாறுள்ளது என்பதை அறிந்து கொள்ளும் பொருட்டு, அவர்களில் சிலரை பி.பி.ஸி தமிழ் சந்தித்துப் பேசியது.

இறுதி யுத்தம் நிறைவுக்கு வந்தபோது, புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த சுமார் 12 ஆயிரம் உறுப்பினர்கள், இலங்கை ராணுவத்திடம் சரணடைந்தனர் எனஇலங்கை அரசாங்கம் தெரிவித்திருந்தது.

அதற்கு முன்னதாக, புலிகள் இயக்கத்தின் கிழக்குத் தளபதி கருணா அம்மான் எனப்படுகிற விநாயக மூர்த்தி முரளிதரன், அந்த இயக்கத்திலிருந்து பிரிந்தபோது, கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த கணிசமான உறுப்பினர்களும் புலிகள் இயக்கத்திலிருந்து விலகி, தமது குடும்பத்துடன்சேர்ந்துகொண்டனர். அவ்வாறானவர்களும் தற்போது பல்வேறு பிரச்சினைகளுக்கு மத்தியிலேயே தமது வாழ்க்கையை எதிர்கொண்டு வருகின்றனர்.

## 13 வயதில் போராடத் துவங்கிய விஜயலட்சுமி

துரைராஜா விஜயலட்சுமி – அவ்வாறான முன்னாள் பெண் புலி உறுப்பினர்களில் ஒருவர். அம்பாறை மாவட்டத்திலுள்ள திருக்கோவில் பிரதேசத்தைச் சேர்ந்த விஜயலட்சுமி 1981ஆம் ஆண்டு பிறந்தவர். வீட்டுக்கு ஒரே பிள்ளை. விஜயலட்சுமியின் சிறிய வயதில், அவரின் அப்பா இறந்துவிட்டார். குடும்பத்தின் வறுமை நிலை காரணமாக அம்மா வெளிநாடு சென்றார். ஒரு கட்டத்தில் நிராதரவான நிலை ஏற்பட்டமை காரணமாக 1994 ஆம் ஆண்டு, தனது 13ஆவது வயதில் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் அவர் இணைந்து கொண்டார்.

விஜயலட்சுமியை சில தினங்களுக்கு முன்னர் அவரின் வீட்டில் சந்தித்தேன். ஓடு மற்றும் தகரம் ஆகிய வற்றால் கூரையாக வேய்ந்த பழைய வீடு ஒன்றில் அவர் வாழ்ந்து வருகிறார். அந்த வீட்டுக்கு அருகிலேயே கோழிக் கூண்டுபோல் ஒரு சின்னக் குடிசையொன்றும் உள்ளது. அது பற்றிக் கேட்டபோது; ஓடு வீடு மிகவும் பழையது. அதன் கூரை பழுதடைந்து விட்டது. பெரும் காற்று வீசும்போது, வீட்டுக் கூரை உடைந்து விழுந்து விடும் எனும் பயத்தில், குடிசைக்குள் வந்து விடுவோம் என்று, வறட்டுப் புன்னகை கலந்த பதிலுடன், அவர் பேசத் தொடங்கினார்.

புலிகள் இயக்கத்தில் சேர்ந்த தனக்கு 3 மாதங்கள் பயிற்சி வழங்கப்பட்டதாகக் கூறும் விஜயலட்சுமி, அந்த இயக்கத்தின் காலால் படையில் ஐந்து ஆண்டுகளும், கடற்படையில் மூன்று ஆண்டுகளும் இருந்துள்ளார்.

மாங்குளம் ராணுவ முகாம் மீது புலிகள் நடத்திய தாக்குதல்தான், தான் கலந்து கொண்ட முதலாவது சண்டை என்கிறார்.

கடற்புலிகள் அணியிலிருந்தபோது, ஒரு நாள் படகொன்றில் 34 போராளிகள் ரோந்தில் ஈடுபட்டிருந்தோம், அப்போது எம்மீது இலங்கைக் கடற்படையினரும் விமானப் படையினரும் கடும் தாக்குதலை மேற்கொண்டார்கள். படகிலிருந்த பலர் காயப்பட்டு இறந்தனர். ஒரு கட்டத்தில் நாங்கள் பயணித்த படகும் கவிழ்ந்தது. நான் நீந்திக் கரை சேர்ந்தேன். என்னைத் தவிர ஏனைய 33 பேரும் அந்தத் தாக்குதலில் பலியாகி விட்டார்கள் என்று தப்பிப் பிழைத்த அனுபவத்தை பி.பி.ஸி உடன் விஜயலட்சுமி பகிர்ந்து கொண்டார்.

புலிகளின் கிழக்குத் தளபதியாக இருந்த கருணா அம்மான் அந்த இயக்கத்திலிருந்து பிரிந்த பின்னர் ஏற்பட்ட குழப்ப நிலையினை அடுத்து, 2003ஆம் ஆண்டு அந்த இயக்கத்திலிருந்து விலகி தனது ஊருக்கு விஜயலட்சுமி திரும்பினார். அப்போது அவரின் அம்மாவும் ஊரிலேயே இருந்தார்.

இயக்கத்திலிருந்து விலகி வந்த 6 மாதத்திலேயே எனக்குத் திருமணம் நடந்தது என்று கூறும் அவருக்கு இப்போது மூன்று பிள்ளைகள் உள்ளனர். அவர்களில் மூத்த பெண்ணுக்கு 16 வயதாகிறது.

## விஜயலட்சுமியின் இல்லம்

மிக நீண்ட காலமாக தனது மகள் நோயால் பாதிக்கப்பட்டுள்ளார் எனவும், தொடர்ச்சியாக சிகிச்சை எடுத்து வருவதாகவும் விஜயலட்சுமி கூறினார். அவரை நான் சந்திக்கச் சென்றிருந்த தருணத்திலும், அந்த மகள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் எனக் கூறினார். அவரின் ஏனைய பிள்ளைகள் இருவரும் ஆண்கள். விஜயலட்சுமியின் கணவர் ஒரு கூலித் தொழிலாளி. எங்கள் வருமானம் சாப்பாட்டுக்கே போதாமல் உள்ளது என்று விஜயலட்சுமி கவலைப்பட்டார்.

எனது வாழ்வாதாரத்துக்கென இதுவரை எந்தவொரு தரப்பும், எந்தவித உதவிகளையும் செய்யவில்லை என்று கூறும் அந்தப் பெண்ணின் வீட்டில், காணுமிட மெல்லாம் வறுமையின் அடையாளங்கள் தெரிகின்றன.

ஒரு சிறிய வீடு, வாழ்க்கையைக் கொண்டு செல்வதற்கான போதிய வருமானம் – அதற்கான வழி. இவைதான் விஜயலட்சுமியின் இப்போதைய எதிர்பார்ப்புகளாக உள்ளன.

**செல்வாக்கு இழந்த நிலையில் வறுமையின் விளிம்பில் அவர்கள்!!**



## 'முன்னர் இருந்த மரியாதை இப்போது இல்லை'

அம்பாறை மாவட்டம் – திருக்கோவில் பிரதேசத்தில் நாம் சந்தித்த விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மற்றொரு முன்னாள் பெண் உறுப்பினர் கனகசுந்தரம் சரோஜினி.

எனக்கு இப்போது 43 வயது. 1997ஆம் ஆண்டு இயக்கத்தில் சேர்ந்தேன். எனக்கு முன்னதாகவே இயக்கத்தில் என்னுடைய தம்பி இணைந்து கொண்டார், என்று கூறிய சரோஜினியிடம், புலிகள் இயக்கத்தில் ஏன் இணைந்து கொண்டீர்கள் என்று கேட்டேன்.

அந்தக் கேள்விக்கு சரோஜினி பதிலளிக்கவில்லை. மௌனமாக இருந்தார். அவரின் கண்கள் கலங்கின, திடீரென ஏற்பட்ட அழுகையை உதடுகளை இறுக்கியவாறு அடக்கிக் கொண்டார். ஆனாலும், கண்ணீரை அவரால் கட்டுப்படுத்த முடியவில்லை.

இந்த அழுகைக்குப் பின்னால், சொல்ல முடியாத காரணங்கள் ஏதாவது இருக்கிறதா? எனக் கேட்டேன்.

சரோஜினி மீண்டும் பேசத் தொடங்கினார்.

தனது தங்கையொருவர் மிகவும் சுயநலத்துடன் சரோஜியின்எதிர்காலம்பற்றியஎவ்விதஅக்கறைகளுமின்றி ஒரு தடவை நடந்து கொண்டமை, சரோஜினிக்கு பெருத்த ஏமாற்றத்தையும் வஞ்சத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது. அதனால் அவர் புலிகள் இயக்கத்தில் போய் சேர்ந்து கொண்டார் எனக் கூறினார்.

நான் எழுதியிருந்த ஓ.எல். (சாதாரண தரம்) பரீட்சையின் பெறுபேறு வெளியாகியிருந்த சமயத்தில்தான் இயக்கத்தில் சேர்ந்து கொண்டேன்.

புலிகளின் அலுவலகம் ஒன்றுக்குச் சென்று, நான் இயக்கத்தில் சேர வேண்டும் என்கிற விருப்பத்தைக் கூறினேன். என்னுடன் இன்னும் பல பெண் பிள்ளைகளும் இருந்தனர். எல்லோரையும் சேர்த்து, மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள தரவை பிரதேசத்துக்கு அழைத்துச் சென்றார்கள். அங்குதான் 3 மாதங்கள் ஆயுதப் பயிற்சி பெற்றுக் கொண்டேன். ஆனாலும், என்னை சண்டையிட அவர்கள் களத்துக்கு அனுப்பவில்லை. எனக்கு தொழில்நுட்ப பயிற்சிகளை வழங்கினார்கள், தமிழ் –ஆங்கில மொழிபெயர்ப்புக் கற்றுக் கொடுத்தார்கள், தாதியொருவருக்குத் தேவையான மருத்துவப் பயிற்சிகளை வழங்கினார்கள். ஆங்கிலம் கற்றுக் கொள்வதில் எனக்கு ஆர்வம் இருக்கவில்லை.

சண்டைக் களத்தில் காயப்படும் போராளிகளுக்கு ஆரம்ப கட்ட சிகிக்சையளிப்பதே எனக்குரிய கடமையாக இருந்தது என்று கூறிய சரோஜினி, ஒரு தடவை, ராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலில் காயப்பட்ட விஜயலட்சுமிக்கும் தான் சிகிச்சையளித்தார் எனத் தெரிவித்தார்.

இவ்வாறு செயற்பட்டு வந்த நிலையில் மட்டக்களப்பு – அம்பாறை மாவட்டங்களுக்கான கள மருத்துவப் பொறுப்பாளராக தான் நியமிக்கப்பட்டார் என சரோஜினி கூறினார்.

இந்த நிலையில், 2004ஆம் ஆண்டு புலிகளின் அனுமதியுடன் இயக்கத்திலிருந்து விலகி, குடும்பத்துடன் சரோஜினி சேர்ந்து கொண்டார்.

புலிகள் இயக்கத்தில் பிராந்திய முக்கியஸ்தராக இருந்த தனது தம்பி, கஞ்சிகுடிச்சாறு பகுதியில் சுட்டுக் கொல்லப்பட்டார் என்றும், கருணா தரப்பினரே அந்தத் தாக்குதலைமேற்கொண்டனர் என்றும் அவர் தெரிவித்தார்.

இப்போது சரோஜினிக்கு 13 வயதில் மகளொருவர் இருக்கிறார். இயக்கத்தில் இருந்து பிரிந்து வந்த பின்னர், 2005 ஆம் ஆண்டு சரோஜினி திருமணம் செய்து கொண்டார்.

கணவர் கூலி வேலை செய்வதால் கிடைக்கும் வருமானத்தில், பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் குடும்பத்தை நடத்தி வருகிறார் என அவர் கூறுகின்றார்.

ஆண்களுக்கு நிகராக விடுதலைப் புலிகள் இயக்கத்தில் செயற்பட்ட உங்களின்இப்போதையவாழ்க்கை எப்படியிருக்கிறது என்று சரோஜினியிடம் கேட்டேன்.

இயக்கத்தில் இருந்த போது கிடைத்த மரியாதை இப்போதைய வாழ்க்கையில் இல்லை என்றார்.

இறுதி யுத்தம் வரை களத்தில் நின்று சண்டையிட்டவர் குட்டிமணி. யுத்தம் முடிவுக்கு வந்தபோது, இலங்கை ராணுவத்திடம் சரணடைந்தார். பல வருடங்கள் இவர் சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டு, பின்னர்புனர்வாழ்வளிக்கப்பட்ட பின்னர், சாதாரண வாழ்க்கைக்குத் திரும்பியுள்ளார்.

அம்பாறை மாவட்டம் திருக்கோவில் பகுதியைச் சேர்ந்த குட்டிமணி, தற்போது தனது உறவினர் ஒருவரின் சிறிய கடையொன்றில் பணி புரிகின்றார்.

புனர்வாழ்வு பெற்றுத் திரும்பிய பின்னர் திருமணம் செய்து கொண்ட குட்டி மணிக்கு 3 வயதில் பெண் குழந்தையொன்று உள்ளது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த முன்னாள் உறுப்பினர்ளை ஒருங்கிணைத்து, அவர்களின் நலன்கள் தொடர்பிலும், அவர்களுக்கு வாழ்வாதார உதவிகளைப் பெற்றுக் கொடுப்பதிலும் குட்டிமணி முன்னின்று செயற்பட்டு வருகின்றார்.

புலிகள் இயக்கத்தின் முன்னாள் உறுப்பினர்கள் பற்றிய தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு, அவரிடம் பேசினேன்.

புலிகள் இயக்கத்தின் முன்னாள் உறுப்பினர்களில் புனர்வாழ்வு பெற்றோர், புனர்வாழ்வு பெறாதோர் என்று இரண்டு வகையினர் உள்ளனர்.

எவ்வாறாயினும் அம்பாறை மாவட்டத்தில் மட்டும் விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் போராளிகள் சுமார் 350 பேர் உள்ளனர். இவர்களில் சுமார் 100 பேர் பெண் போராளிகள்.

புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகளில் ஒரு சிலருக்கு அரசு உதவிகள் கிடைத்துள்ளன. ஆனால், இறுதி யுத்தத்துக்கு முன்னர் இயக்கத்திலிருந்து விலகிய நிலையில் புனர்வாழ்வு பெறாதோருக்கு, எந்தவித உதவிகளும் யாரிடமிருந்தும் கிடைக்கவில்லை என்கிறார் குட்டிமணி.

களத்தில் நின்று போர்களை எதிர்கொண்ட புலிகள் இயக்கத்தின் முன்னாள் உறுப்பினர்களில் மிக அதிகமானோர், தமது அன்றாட உணவுக்கான வருமா னத்தைப் பெற்றுக் கொள்வதற்காகவே, தினமும் வேறொரு வகையான போரினை சந்தித்துக் கொண்டிருக்கின்றனர் என்பதை, அவர்களுடன் பேசியபோது புரிந்து கொள்ள முடிந்தது. *

# பல்கலை ஊழியர் போராட்டத்துக்கு நேரில் சென்று ஆதரவளித்தார் விக்கி

யாழ்ப்பாணம், செப். 13

யாழ் .பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர் ஆட்சேர்ப்பில்பாதிக்கப்பட்டோர்கடந்தபுதன்கிழமை முதல் சுழற்சி முறையில் உணவு தவிர்ப்புப் போராட் டத்தை ஆரம்பித்துள்ளனர்.

போராட்டக் களத்துக்கு நேற்று வியாழக் கிழமை வடக்கு மாகாண முன்னாள் முதலமைச் சரும் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமுமான சி.வி.விக்னேஸ்வரன் சென்று அங்கு போராட்டத்தில் ஈடுப்பட்டிருந்தவர்க ளுடன் கலந்துரையாடினார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஊழி யர்களைஆட்சேர்ப்புச் செய்வதில் பக்கச் சார்பு களும் முறைகேடுகளும் நிலவுகின்றன எனவும், அரசியல் தலையீடு காணப்படுவதாகவும் ஊழி யர் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.





இதனை எதிர்த்து உணவுதவிர்ப்புப்போராட்டம் நேற்று இரண்டாவது நாளாகவும் நடைபெற்றது. இதன்போதே வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அங்கு சென்று போராட்டத்துக்கு ஆதரவளித்தார். (ஐ)

# சுதந்திரக் கட்சிக்கு மொட்டு மிரட்டல்!

## உடன்படாவிடின் கடும் விளைவுகள் ஏற்படுமாம்

கொழும்பு, செப். 13

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாகத் தங்களுடன் ஒரு புரிந்துணர்வை எட்டாவிட்டால், கடுமையான விளை வுகளைச் சந்திக்க நேரிடும் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன எச்ச ரிக்கை விடுத்துள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் எதிர்க்கட்சித் தலைவரின் செயலகத் தில் நடத்திய செய்தியாளர் சந்திப் பில், கூட்டு எதிரணியின் நாடாளு மன்ற உறுப்பினர்களான சுசில்பிரேம ஜயந்தவும், மகிந்தானந்த அளுத்கம கேயும் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

அவர்கள் தெரிவிக்கையில் –

உடன்பாட்டை இறுதி செய்வதற் கான நேரம் விரைவாக கழிந்து கொண்டிருக்கிறது.

2015 நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு சார்பில் 95 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

2018 ஏப்ரலில் ரணில் விக்கிரம சிங்கவுக்கு எதிராக நம்பிக்கையில் லாப் பிரேரணை கொண்டு வரப் பட்டபோது, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அணியில் 36 உறுப்பினர்கள் இருந்தனர்.

அதற்குப் பின்னர் 22 பேராக இருந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி யின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கை, சரத் அமுனுகமவும், மோகன்லால்கிரேரோவும்கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஆதரவு தெரிவித்த பின்னர் 20 ஆகக் குறைந்தது. அவர்களில் 6 பேர் இப்போது ஐ.தே. கவுக்கு ஆதரவு அளிக்கின்றனர்.

இப்போது 14 ஆக உள்ள சுதந் திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களில், பெரும்பாலா னோர் வேட்புமனுக் கோரப்பட்டதும், கோட்டாபய ராஜபக்ஷவின் பக்கம் வந்து விடுவார்கள்.

இதனால் சுதந்திரக் கட்சி நாடா ளுமன்ற உறுப்பினர்களின் எண் ணிக்கை 4 ஆகக் குறைந்து விடும்.

ஜே.வி.பி. மற்றும் அதிலிருந்து பிரிந்த தேசிய சுதந்திர முன்ன ணியை விட சிறிய கட்சியாக அது மாறிவிடும் – என்றனர். (ஐ)

# கந்தர்மடம் அலைபேசிக் கடையை உடைத்துத் திருடிய இருவர் சிக்கினர்

யாழ்ப்பாண, செப். 13

யாழ்ப்பாணம், கந்தர்மடம் – பலாலி வீதி யில் உள்ள அலைபேசி விற்பனை நிலையத் திற்குள் புகுந்து சுமார் 6 லட்சம் ரூபா பெறுமதி யான அதிதிறன் அலைபேசிகளைத் திருடிச் சென்ற குற்றச்சாட்டில் இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அலைபேசி விற்பனை நிலையத்திலிருந்து திருடிய அலைபேசி ஒன்றில் சிம் அட்டையைப் பயன்படுத்தப்பட்டது.

அலைபேசியின் எமி இலக்கத்தை வைத்து அதனைப் பயன்படுத்துபவர் கண்டறியப்பட்டார். அவரை பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்தனர். அவர் வழங்கிய தகவலின் அடிப்படை யில்மற்றையசந்தேகநபரும்கைதுசெய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட இருவரும் 19 மற்றும் 20 வயதுடையவர்கள். அவர்கள் கோப்பாயைச் சேர்ந்தவர்கள். சந்தேகநபர்களிடமிருந்து 10 அலைபேசிகள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கந்தர்மடம் பலாலி வீதியின் ஆலடிப் பகுதி யில் அமைந்துள்ள அலைபேசி விற்பனை நிலையத்திற்குள் கடந்த 31ஆம் திகதி அதிகாலை 1.30 மணியளவில் கதவுடைத்து உட்புகுந்த திருடர்கள் விலை உயர்ந்த அலைபேசிகளை திருடிச்சென்றனர். 18 அலைபேசிகள்திருடப்பட்டன என்று யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

அந்த விற்பனை நிலையத்தில் சி.சி.ரி.வி. கம ராக்கள் பொருத்தப்பட்டிருந்த நிலையில் முகத் தைத் துணியால் மூடிக் கட்டியவாறு திருடர்கள் உள்நுழைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கடையில் நீண்ட நேரம் தேடுதலில் ஈடுபட்டு அலைபேசிகளைத் திருடிய திருடன் ஒருவன் அங்கிருந்து வெளியேறும் சமயம் கைவிரல் அடையாளம் கண்டு கொள்ளமுடியாதவாறு ஓர் துணியினால் தான் கையாண்ட பொருள்கள் மற்றும் இடங்கள் அனைத்தையும் சுத்தம் செய்தமை சிசிரிவி பதிவில் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ – 07)

# மின்தடை

யாழ்ப்பாணம், செப். 13

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங் களின் கட்டமைப்பு மற்றும் பராம ரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8.00 மணி யிலிருந்து மாலை 5.00 மணி வரை –

**யாழ் பிரதேசத்தில் –**

யாழ் பிரதேசத்தில் மூத்த விநாய கர் கோவிலடி, ஆனைக்கோட்டை, நவாலி, சென்பீற்றர்ஸ் தேவாலயம், வேலக்கை பிள்ளையார் கோவிலடி, அட்டகிரி, குளப்பிட்டி, வராகிபாடசாலை, சாவற்காடு, காக்கை தீவு, வேம்பிராய், கனகம்புளியடி, சரசாலை, கல்வயல், மட்டுவில் வீதி கேணி, முத்துமாரி அம்மன் கோவிலடி, தலங்காவில், திருநெல்வேலி, பரமேஸ்வராச் சந்தி, சிவன் அம்மன் வீதி, கந்தர்மடம், அன்னசத்திரச் சந்தி, இலுப்பையடி சந்தி, பருத்தித்துறை வீதியில் நாக சிகாரையில் இருந்து பாரதியார் சிலை வரை, விக்ரோறியார் வீதி, மின்சார நிலைய வீதியில் ஒரு பகுதி, புகையிரத நிலையப் பிரதேசம், மாா டின் வீதி, யாழ் 2ம் 3ம் 4ம் குறுக்கு தெருக்கள், ஸ்ரான்லி வீதியில் புகை யிரதக்கடவையிலிருந்து இராசாவின் தோட்ட வீதி வரை, அம்பலவாணர் வீதி , அன்னசத்திர வீதி , ஆஸ்பத் திரி வீதி வேம்படி சந்தியிலிருந்து மார்டின் வீதி வரை, ஸ்ரான்லி வீதி யில் ஆரியகுளத்திலிருந்து முட்டாசுக் கடை சந்தி வரை, கஸ்தூரியார் வீதி யில் ஒரு பகுதி, மணிக்கூட்டு வீதி யில் ஒரு பகுதி, நொதோர்ண் சென்றல் கொஸ்பிற்றல், யாழ்ப்பாணப் பல் கலைக்கழக ஆண்கள் விடுதி, பம்றோ பலாலி வீதி , ஹற்றன் நஷனல் வங்கியின் பிராந்திய அலுவலகம், பீப்பிள் லீசிங் அன் பினான்ஸ் கம்பனி ஸ்ரான்லி வீதி, AVNOR பிறைவேற் லிமிற்றெட், மக்கள் வங்கி ஸ்ரான்லி வீதி , யாழ் புகையிரத நிலையம், Green Grass விடுதி, சிறிநதியா நகை மாளிகை, Raja Talkies, LOLC விடுதி, ரொப்பாஸ், சிறுப்பிட்டி , குட் டியப்புலம், சுதந்திரபுரம், ஈவினை, நிலாவரை, புத்தூர், கலைமகள், ஊறணி, வீதி வாணி, வாதரவத்தை, ஆவரங்கால், அச்சுவேலி, பெரியபொக்கணை, சுன்னாகம் ஒரு பகுதி, Dr.சுப்பிரமணியம் வீதி , ஐயனார் கோவிலடி, மயிலணி, மல்லாகம், ஏழாலை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான், தெல் லிப்பளை, நீதிமன்ற கட்டடத் தொகுதி மல்லாகம், சுன்னாகம் மக்கள் வங்கி, சுன்னாகம் கார்கில்ஸ் பூட்சிற்றி, கீரி மலை, கொல்லங்கலட்டி, மாவிட்ட புரம் கந்தசாமி கோவில் பிரதேசம், மாவைகலட்டி, கடற்படை முகாம் கீரிமலை ஆகிய பிரதேசங்களிலும், மின்விநியோகம் தடைப்பட்டிருக் கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

northern PC Park
கணினி உலகில் நம்பகமான சேவையில் 10 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
வடக்கின் கணினிப் பூங்கா
# 10, Muddaskada Junction
Stanly Road, Jaffna
தரமான கணினிகளைப் பெற்றுக் கொள்ள நம்மை நாடுங்கள்
www.pcpark.co
info.pcpark.co
Northern Pc Park 0777570124 0215675566
NPcpark 0773366443 0212229581
northernpcpark 0766999597 0212222050
Northern Pc Park 0717772377 0212220388

காலைக்கதிர்
Kalaikathir






# பாகிஸ்தான் – இலங்கை தொடர் நடப்பதில் சிக்கல்!

இலங்கை மற்றும் பாகிஸ்தான் அணிக ளுக்கிடையிலான கிரிக் கெட்தொடர்நடைபெறுவ தில், மீண்டும் சிக்கல் நிலை எழுந்துள்ளது.

தொலைத்தொடர்பு, வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் விளை யாட்டுத்துறை அமைச்சின் ஊடாக பிரதமர் அலுவலகத் தில் இருந்து இலங்கை கிரிக்கெட் சபைக்கு எச்சரிக்கை ஒன்று கிடைக்கப்பெற்றதை அடுத்து, பாகிஸ்தானின் பாதுகாப்பு நிலைமை குறித்து மீளாய்வு ஒன்றை மேற் கொள்வதற்கு இலங்கை அரசின் உதவியை இலங்கை கிரிக்கெட் சபை நாடியுள்ளது.

இந்த எச்சரிக்கையில், பாகிஸ்தான் சுற்றுப்பயணத் தின்போது இலங்கை அணிக்கு தீவிரவாத அச்சுறுத்தல் இருப்பதற்கான சாத்தியம் இருப்பதாக நம்பகமான, தக வல்கள் பிரதமர் அலுவலகத்திற்குக் கிடைத்திருப்பதாக கூறப்படுகிறது.

இதனால், இந்தச் சுற்றுப்பயணத்திற்கு முன்னர் தீவிர அவதானம் செலுத்தும்படியும் நிலைமை குறித்து 'மீளாய்வு' ஒன்றை செய்யும்படியும் இலங்கை கிரிக்கெட் சபைக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஏற்கனவே, இலங்கை கிரிக்கெட் சபையின் பாதுகாப் புக் குழு ஒன்று பாகிஸ்தான் சென்று பாதுகாப்பு ஏற்பாடு களை ஆராய்ந்து உறுதிப்படுத்திய பின்னரே, இலங்கை அணியின் பாகிஸ்தானுக்கான இந்த சுற்றுபயணத் திற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

தற்போது மீண்டும் இவ்வாறு பாதுகாப்பு அச்சுறுத் தல் வந்துள்ளமை, இத்தொடர் நடைபெறுவதற்கான சாத்தியத்தை குறைத்துள்ளது.

பாகிஸ்தானுக்கு சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் இலங்கை கிரிக்கெட் அணி, இந்த மாத இறுதியில் இருந்து அடுத்த மாதம் நடுப்பகுதி வரை கராச்சி மற்றும் லாஹூர் நகரங்களில் பாகிஸ்தான் அணியுடன் மூன்று ஒருநாள் போட்டிகள் மற்றும் மூன்று ரி -20 போட்டிகள் கொண்ட தொடர்களில் விளையாடவுள்ளது.

எனினும், பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணத்தை முன் னிறுத்தி, இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னணி பத்து வீரர்கள், பாகிஸ்தான் அணியுடனான தொடரை புறக்கணித்தனர்.

இரு அணிகளுக்கிடையிலான இத்தொடர் பாகிஸ்தான் மண்ணில் நடைபெற்றால், பாகிஸ்தான் மீதான தீவிரவாத அச்சம் துடைக்கப்படும், மீண்டும் பாகிஸ்தானில் கிரிக்கெட் புத்துயிர் பெறும் என எதிர்பார்த்துக் காத்திருந்த பாகிஸ்தா னியர்களுக்கு இலங்கை வீரர்களின் புறக்கணிப்பு பேரி டியாக தலையில் வீழ்ந்தது.

எனினும், ஒருநாள் அணிக்கு லஹிரு திரிமன்னவும், ரி-20 அணிக்கு தசுன் சானகவையும் அணித்தலைவராக நியமித்து, இலங்கை அணியை தெரிவுக் குழு தயார் செய்துள்ளது.

கடந்த 2009ஆம் ஆண்டு பாகிஸ்தான் சுற்றுப்பய ணத்தில் இலங்கை அணி வீரர்கள் சென்ற பஸ் மீது துப் பாக்கிதாரிகள் நடத்திய தாக்குதலில் ஆறு வீரர்கள் காய மடைந்தனர். இந்த சம்பவத்தில் ஆறு பாகிஸ்தான் பொலி ஸார் மற்றும் இரண்டு பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

இதனால், பாகிஸ்தானிற்கு சென்று விளையாட சர்வ தேச அணிகள் தயக்கம் காட்டின. ஆனாலும் கடும் முயற்சிகளை மேற்கொண்ட பாகிஸ்தான், 2015ஆம் ஆண்டு சிம்பாப்வேயை பாகிஸ்தான் வரவழைத்து கிரிக் கெட் தொடரிலும் விளையாடி, வீரர்களுக்கு பணப்பரிசினை யும் பரிசளித்தது.

இதன்பிறகு, 2017ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் இரண்டாம் நிலை இலங்கை அணி பாகிஸ்தானில் ஒரேயொரு ரி - 20 போட்டியில் விளையாடியது.

கடந்த இரண்டு ஆண்டுகளில் ஐ.சி.சி. உலக பதி னொருவர் அணி மற்றும் மேற்கிந்திய தீவுகளும் பாகிஸ் தானில் குறுகிய கால ரி - 20 சர்வதேச தொடர்களில் விளையாடின.

இவ்வாறான கடுமையான முயற்சிகளை பாகிஸ்தான் மேற்கொண்ட போதும், பாகிஸ்தான் மீது நம்பிக்கையில் லாத சர்வதேச அணிகள், அங்கு சென்று விளையாட, தொடர்ந்தும் தயக்கம் காட்டுகின்றன.

ஆனால், உலகளவில் தனிமைப்படுத்தப்பட்ட பாகிஸ் தானுக்கு 10 ஆண்டுகளுக்கு பிறகு முதன்மை இலங்கை அணி, செப்ரெம்பர் 27ஆம் திகதி முதல் ஒக்டோபர் 9ஆம் திகதி வரை கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டு, மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரிலும், மூன்று போட்டிகள் கொண்ட ரி - 20 தொடரிலும் விளையாட இருந்தது.

இந்த நிலையிலேயே இலங்கை அணியின் முன் னணி வீரர்களான திமுத் கருணாரத்ன, நிரோஷன் திக் வெல்ல, குசல் ஜனித் பெரேரா, தனஞ்சய டி சில்வா, திசர பெரேரா, அகில தனஞ்சய, லசித் மலிங்க, அஞ்சலோ மத்தியூஸ், சுரங்க லக்மால், தினேஷ் சந்திமால் ஆகியோர் பாகிஸ்தான் அணியுடனான தொடரிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 2 வருடங்களுக்கு பின் இந்தியா - இலங்கை இடையே ரி - 20 தொடர்!

இங்கிலாந்தில் நடைபெற்று முடிந்த உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் முடிந்த கையோடு, அனைத்து அணிகளும் அடுத்த ஆண்டு ஆஸ்தி ரேலியாவில் நடைபெறவுள்ள ரி - 20 உலகக் கிண்ண தொடருக்கு தயாராகிவிட்டன.

இதனால், ரி - 20 உலகக்கிண்ண தொடருக்கு தயாராகும் வகையில், ஒவ்வொரு அணிகளும் போட்டி போட்டுக் கொண்டு, ரி -20 போட்டிக்கான அட்டவணையை தயார் செய்து வருகின்றன.

இந்த நிலையில், இந்திய அணி இலங்கையுடன் மூன்று போட்டிகள் கொண்ட ரி - 20 போட்டியில் விளையாட தீர்மானித்துள்ளது.

இதற்கமைய, இத்தொடரை பெரும்பாலும் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் நடத்த திட்டமிடப் பட்டுள்ளது. எனினும் இதற்கான பேச்சு ஆரம்ப கட்டத்திலேயே உள்ளதாகவும், இதுகுறித்த உத்தி யோகபூர்வ அறிவிப்பு வெகுவிரைவில் வெளி யாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

2017ஆம் ஆண்டுக்குப் பிறகு இந்தியா மற் றும் இலங்கை அணிகளுக்கிடையிலான தொடர் நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஏற்கனவே சிம்பாப்வே மற்றும் ஆஸ்தி ரேலியா அணிகள் இந்தியா வந்து விளையாடு கின்றன. தற்போது இலங்கை அணியும் இந் தியா வந்தால் போட்டி அட்டவணையை தயாரிக்க இந்தியாவுக்கு கடினமான நிலை ஏற்படும்.

ஆனால், ஒரு வாரத்திற்குள் மூன்று போட்டிகளையும் நடத்த இந்தியா திட்டமிட்டுள்ள தாக கூறப்படுகிறது.

## ரி - 20 உலகக் கிண்ண தொடரிலும் டி கொக் அணித் தலைவரா?

இங்கிலாந்தில் நடைபெற்றுமுடிந்த உலகக்கிண்ண கிரிக்கெட் தொடருக்கு பின்னர், தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி யில், அந்நாட்டு கிரிக்கெட் சபை, பல அதி ரடி மாற்றங்களை கொண்டுவந்துள்ளது.

இதற்கமைய முதற்கட்டமாக ரி - 20 கிரிக்கெட் அணியின் தலைவராக இருந்த டு பிளெஸிஸ், அணியிலிருந்து நீக்கப் பட்டு, ரி-20 அணியின் புதிய தலைவராக விக்கெட் காப்பாளர் குயிண்டன் டி கொக்கை நியமித்தது.




இந்த நிலையில், டு பிளெசிஸ்க்கு 35 வயதாகிறது. டி கொக்கிற்கு 26 வயதுதான் ஆகிறது. கடந்த 2012ஆம் ஆண்டிலிருந்து ஜாம்பவான அவர் போட்டிகளில் விளை யாடியுள்ளார். இதனால் அவருக்கு போது மான அனுபவம் உள்ளது.

ஆகவே, ஆஸ்திரேலியாவில் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள ரி -20 உலகக் கிண்ண தொடரில், டி கொக் தலைமையில் தென்னாபிரிக்கா கிரிக்கெட் அணி களமி றங்க வேண்டுமென தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை, விரும்புகின்றது.

இந்தியா அணிக்கெதிரான தொடரில் டி கொக், சிறப்பாக செயற்பட்டால் தொடர்ந் தும் அணித்தலைவராக செயற்பட அதிக அளவில் வாய்ப்புள்ளது. எனவே முடிவு எவ்வாறு அமையப் போகின்றது என்ப தனை பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.

இந்தியாவிற்கு கிரிக்கெட் சுற்றுப்பய ணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்கா அணி, மூன்று போட்டிகள் கொண்ட ரி - 20 தொடரிலும், மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரிலும் விளையாடவுள்ளது.

இந்த நிலையில், இவ் இரு போட்டித் தொடருக்குமான தென்னாபிரிக்கா அணி, ஏற்கனவே அறிவிக்கப்பட்டு விட்டது.

எனினும், இதே தொடரின் இறுதி தொட ரான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேச தொடர் மீண்டும் 2020ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெறவுள்ளது.

இதில், தென்னாபிரிக்க டெஸ்ட் அணியை டு பிளெஸிஸ் வழிநடத்துவார் என, தென் னாபிரிக்க கிரிக்கெட் சபை அறிவித்துள் ளது.

இதேவேளை அணித்தலைவர் பதவியி லிருந்து நீக்கப்பட்ட டு பிளெஸிசின் பெயர் ரி-20 தொடருக்கான அணியில் உள்வாங் கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக் கது.

இரு அணிகளுக்கிடையில் முதலாவ தாக மூன்று போட்டிகள் கொண்ட ரி - 20 தொடர் நடைபெறவுள்ளது. இதன் முதல் போட்டி நாளைமறுதினம் தர்மசாலா மைதா னத்தில் நடைபெறவுள்ளது.

## யூரோ கிண்ணத் தொடரில் ரொனால்டோ சாதனை!

யூரோ கிண்ண உதைபந்துத் தொடரில் போர்த்துக் கலின் புகழ் பூத்த வீரரான கிறிஸ்டியானோ ரொனால்டோ, புதிய சாதனையொன்றினை பதிவு செய்துள்ளார்.

யூரோ கிண்ண உதைபந்துத் தொடரின் தகுதிச்சுற்று போட்டிகளில், அதிக கோல்கள் அடித்த வீரர் என சாதனையை ரொனால்டோ படைத்துள்ளார்.

ஐரோப்பிய உதைபந்து அணிகளுக்கிடையிலான 'யூரோ' கிண்ண உதைபந்துத் தொடர், எதிர்வரும் 2020ஆம் ஆண்டு நடைபெறவுள்ளது.

இதற்கான தகுதிச்சுற்றுப் போட்டிகள் தற்போது நடை பெற்று வருகின்றன. இதில் 'பி' பிரிவில் போர்த்துக்கல், உக்ரைன், லிதுவேனியா, சேர்பியா, லக்சம்பேர்க் அணி கள் இடம் பெற்றுள்ளன.

லிதுவேனியாவின் வில்னியஸ் பகுதியில் நடை பெற்ற போட்டியொன்றில், போர்த்துக்கல் அணியும் லிதுவேனியா அணியும் பலப்பரீட்சை நடத்தின.

இதில் அணித்தலைவர் கிறிஸ்டியானோ ரொனால் டோவின் 4 கோல்கள் துணையுடன் போர்த்துக்கல் அணி, 5 - 1 என்ற கோல்கள் கணக்கில் அபார வெற்றிபெற் றது.

இதில் ரொனால்டோ 4 கோல்கள் அடித்ததன் மூலம், யூரோ கிண்ண உதைபந்து தகுதிச்சுற்றில் அதிக கோல் கள் அடித்த வீரர்கள் பட்டியலில் முதலிடம் பிடித்தார். இதுவரை அவர் 25 கோல்கள் அடித்துள்ளார்.

இவரையடுத்து, அயர்லாந்தின் ரொபி கேன் 23 கோல்களுடன் இரண்டாவது இடத்தில் உள்ளார்.

ஐரோப்பிய அரங்கில் அதிக கோல் அடித்தவர்களுக் கான வீரர்கள் பட்டியலில், ரொனால்டோ, 160 போட்டிகளில் 93 கோல்கள் அடித்து முதலிடத்தில் நீடிக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# யாழ்.பல்கலை ஊழியர் போராட்டத்துக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆதரவு

யாழ்ப்பாணம், செப். 13

யாழ். பல்கலைக்கழகத்திற்கு கல்விசாரா ஊழியர்களை ஆள்சேர்த்துக் கொள்ளும் நடைமுறையைப் பக்கச் சார்பற்றதாகவும், அரசியல் தலையீடு அற்றவகையிலும் மேற்கொள்ளவேண்டுமென வலியுறுத்தி யாழ் பல்கலைக்கழக ஊழியர்களினால் முன்னெடுக்கப்படும் போராட்டத்திற்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பூரண ஆதரவு தெரிவித்துள்ளது.

இது குறித்து முன்னணி வெளியிட்டுள்ள அறிக்கையில்–

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் தில் ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்வதில் பக்கச் சார்புகளும் முறைகேடுகளும் நிலவுகின்றன எனவும், அரசியல் தலையீடு காணப்படுவதாகவும் ஊழியர் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

உயர்கல்வியமைச்சிலிருந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு அனுப்பப்பட்டுள்ள ஆள்சேர்ப்புப் பட்டியலில் வடக்கு மாகாணத்திலிருந்து விண்ணப்பித்திருந்த 400 இற்கும் அதிகமான கல்விசாரா ஊழியர்களின் பெயர்கள் நீக்கப் பட்டுள்ளன.

குறிப்பாக யாழ் பல்கலைக் கழகத்தின் கிளிநொச்சி வளாகத்தில் ஒப்பந்த நிறுவனமொன்றின் கீழ் பணியாற்றுகின்ற 53 பேர்களின் பெயர்கள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றுகின்ற 30 இற்கும் மேற்பட்ட ஊழியர்களின் பெயர்கள், வவுனியா வளாகத்தில் பணியாற்று கின்ற ஊழியர்களின் பெயர்கள் தவிர்க்கப்பட்டு வடக்கு மாகாணத்திற்கு வெளியேயிருந்து அமைச்சர் ரவூப் ஹக்கீம் தனது ஆதரவாளர்களின் பெயர்களை இணைத்து ஆட்சேர்ப்புப் பட்டியலை அனுப்பியுள்ளனர் என்றும் ஊழியர் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. அமைச்சரின் இந்தச் செயற்பாட்டினை மிக வும் வன்மையாகக் கண்டிக் கின்றோம்.

இந்நிலையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நிலவுகின்ற ஆட்சேர்ப்பு நடைமுறையிலுள்ள பிரச்சினைகள் மற்றும் நிர்வாக முறைகேடுகள் போன்ற பிரச்சினை களுக்குத் தீர்வுபெற்றுத் தருமாறு கோரி யாழ்ப்பாணப் பல்கலைக் கழகக் கல்விசாரா ஊழியர்கள் கடந்த வெள்ளிக்கிழமை பல்கலைக்கழக நுழைவாயிலை இடைமறித்துக் கவனவீர்ப்புப் போராட்டமொன்றை முன்னெடுத்திருந்தனர்.

எனினும் அவர்களது கோரிக்கைகள் புறக்கணிக்கப்பட்டுள்ளது டன் ரவூப்ஹக்கீம் மீண்டும் அமைச் சராகப் பொறுப்பேற்ற பின்னர் தான் முன்னதாக அனுப்பியிருந்த ஆள்சேர்ப்புப் பட்டியலிலுள்ளவர்களுக்கு நியமனங்கள் வழங்குவதை விரைவுபடுத்துமாறு யாழ்ப்பாணப் பல்கலைக் கழக நிர்வாகத்திற்கு அழுத்தம் கொடுத்துள்ளார் என ஊழியர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

தமிழர்களின் தொழில் வாய்ப்பைத் திட்டமிட்டுபறிக்கும் நோக்கிலும், இனங்களுக்கு இடையில் விரிசலை ஏற்படுத்தும் வகையிலும், பல்கலைக் கழகநிர்வாகச்செயற்பாடுகளைச் சீர்குலைக்கும் வகையிலும் அரசியல்தலையீடுகளைமேற்கொள்ளும் அமைச்சர் ரவூப் ஹக்கீமின் செயற்பாட்டினை மிகவும் வன்மையாகக் கண்டிப்பதுடன் அவர் தனது அரசியல் தலையீடுகளை நிறுத்திக் கொள்ளவேண்டுமெனவும் வலியுறுத்துகின்றோம். மேலும் பல்கலைக்கழகநிர்வாகம் அத்தகையசெயற்பாடுகள் தொடர இடமளிக்கக்கூடாதெனவும் கோருகின்றோம்–என்றுள்ளது.

# தேர்தல் நடவடிக்கைகளில் இறங்கினார் தேசப்பிரிய!

## முக்கிய சந்திப்புக்களை நடத்துகிறார்

கொழும்பு, செப். 13

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான நடவடிக்கைகளை எடுக்க ஆரம்பித்துள்ளார் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான அறிவித்தலை விசேட வர்த்தமானியில் அவர் இந்த மாத நடுப்பகுதியில் வெளியிடுவாரென்றும் அது தொடர்பில் அரச அச்சகரை அவர் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார் எனவும் அறியமுடிந்தது.

பெரும்பாலும் எதிர்வரும் 18ஆம், 19 ஆம் திகதிகளில் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியாகலாமெனத் தெரிகிறது.

இதேவேளை, அரசியல் கட்சித் தலைவர்கள் மற்றும் அரச நிறுவனங்களின் தலைவர்களுடனும் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் விசேட சந்திப்புக்களை நடத்தவுள்ளார்.

ஏற்கனவே அரச உயர்மட்ட அதிகாரிகளுடன் பேச்சு நடத்தியுள்ள தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் , அரச வாகனங்களைத் தேர்தலுக்குப் பயன்படுத்துவது பற்றியும் கலந்துரையாடி யுள்ளார். (ஐ)

# அரிய வாய்ப்பை பயன்படுத்த இலங்கை அரசு தவறிவிட்டது

## பொருளாதார நிபுணர் கருத்து

கொழும்பு, செப். 13

பொருளாதாரச் சீர்திருத்தங்களைவகுக்க 2015ஆம்ஆண்டில் வழங்கப்பட்ட அரிய வாய்ப்பைப் பயன்படுத்த அரசு தவறிவிட்டது என்று, புகழ்பெற்ற பொருளாதார நிபுணர் டாக்டர் ரஸீன் சாலி, தெரிவித்தார்.

இதனால், அடைய முடிந்த அரசியல் மற்றும் நிறுவன மாற்றங்கள் கூட தலைகீழாக மாறும் அபாயத்தில் உள்ளன என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழகத்தின் இணைப்பேராசிரியரும், நிதி அமைச்சகத்தின் முன்னாள் ஆலோசகருமான டாக்டர் சாலி, மத்திய வங்கியின் 69ஆவது ஆண்டுவிழா உரையை நிகழ்த்துகையில் இதனைக் கூறினார்.



# முகமாலையில் மனித எச்சங்கள்

யாழ்ப்பாணம், செப். 13

முகமாலை வடக்கில் கண்ணிவெடி அகற்றும் பணிகள் இடம்பெற்று வரும் பகுதியில் மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

அந்தப் பகுதியில் நேற்று முன் தினம் கண்ணிவெடிகளை அகற்றும் பணி இடம்பெற்ற வேளையில் இந்த மனித எச்சங்கள் காணப்பட்டுள்ளன.

இதைத் தொடர்ந்து பளைப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது. இது தொடர்பான விசாரணையைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# 200 வர்த்தகர்கள் மீது வழக்கு

கொழும்பு, செப். 13

அதிக விலைக்குக் கோதுமை மாவை விற்பனை செய்த 200 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது.

திடீரெனமுன்னெடுத்தசோதனை நடவடிக்கையின்போது சிக்கிய வர்த்தகர்கள் மீதே வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக அதன் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

எதிர்வரும் காலத்தில் அதிக விலைக்குக் கோதுமை மாவை விற்பனைசெய்யும்வர்த்தகர்களுக்கு எதிரான நடவடிக்கை எடுக்கச் சட்ட ரீதியானநடைமுறைகள்மேற்கொள்ளப்படும்என்றும்அவர்குறிப்பிட்டார்.

பழைய விலைக்கே கோதுமை மாவினை விற்பனை செய்வதற்கு மா நிறுவனங்கள் வாழ்க்கைச் செலவுக் குழுவினருக்கு இணக்கம் வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)




# நல்லூரிலிருந்து பாத யாத்திரை



யாழ்ப்பாணம், செப். 13

நல்லூா கந்தசுவாமி கோவிலிலிருந்து கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயம் நோக்கிய பாத யாத்திரை நேற்றுக் காலை ஆரம்பமானது.

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்திலிருந்து நேற்றுக் காலை 8 மணிக்கு சிவலிங்கம் தாங்கிய ஊர்தியுடன் இந்த பாதயாத்திரை ஆரம்பமாகியுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா சென்று அங்கிருந்து திருகோணமலை சென்று மட்டக்களப்பு ஊடாகக் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் இது நிறைவடையவுள்ளது.



இந்தப் பாதயாத்திரை செல்லும் வழியில் உள்ள பழைமையான ஆலயங்களில் விசேட வழிபாடு களும் நடத்தப்படவுள்ளன.

நாட்டில் சமாதானம், நிரந்தர அமைதி, நல்லிணக்கம் மேம்பட இறையருள் வேண்டியே இந்தப் பாத யாத்திரை இடம் பெறுகின்றது. (ஐ)



# ‘புலதிசி’ கடுகதி ரயில் சேவையை ஆரம்பித்து வைத்தார் ஜனாதிபதி



கொழும்பு, செப். 13

கொழும்பு கோட்டையிலிருந்து பொலனறுவை வரை புலதிசி நகர் சேவை கடுகதி ரயில் நேற்று முன்தினம் பிற்பகல் தனது பயணத்தை ஆரம்பித்தது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்தப் பயணத்தில் இணைந்துகொண்டதோடு, அவர் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திலிருந்து மருதானை ரயில் நிலையம் வரை பயணித்தார்.

தினமும் பிற்பகல் 3.00 மணிக்கு கோட்டை ரயில் நிலையத்திலிருந்து பயணத்தை ஆரம்பிக்கும் ரயில் இரவு 7.45 மணிக்கு பொலனறுவையை சென்றடையும்.

மறுநாள் அதிகாலை 3.45 மணிக்கு பொலனறுவையிலிருந்து மீண்டும் புறப்படும் ரயில் மு.ப. 9.06 மணிக்கு கோட்டை ரயில் நிலையத்தை வந்தடையும்.

இப்புதிய கடுகதி ரயில் பொலனறுவை, குருநாகல், மஹறவ, கெக்கிராவ, ஹபரண, ஹிங்குரக்கொட ஆகிய ரயில் நிலையங்களில் நிறுத்தப்படும்.

இலங்கை ரயில் சேவைக்குப் புதிதாக இணைக்கப்பட்டுள்ள புலதிசி நகர் சேவை கடுகதி ரயில் எஸ் 13 சார்ந்த அதிநவீன சொகுசு ரயிலாகும்.

கொழும்பு கோட்டை மற்றும் பொலனறுவை நகரங்களுக்கிடையிலான விசேட ரயில் சேவை கடந்த சில தசாப்தங்களாக இடம்பெறவில்லை என்பதுடன், அந்தக் குறையை நிவர்த்திக்கும் வகையிலேயே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலையீட்டில் பொலனறுவை கடுகதி ரயில் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, மருதானை ரயில் நிலையத்தின் கட்டுப்பாட்டு அறையையும் ஜனாதிபதி நேற்று முன் தினம் பார்வையிட்டார்.

அமைச்சர் அர்ஜுன ரணதுங்க, இராஜாங்க அமைச்சர் அசோக அபேசிங்க மற்றும் இந்திய உயர்ஸ்தானிகர் உள்ளிட்ட அதிதிகள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். (ஐ)

# வெளியாரின் தலையீட்டை ஒருபோதும் ஏற்கமுடியாது

## ஜெனீவாவில் இலங்கை திட்டவட்டம்




ஜெனீவா, செப். 13

உள்நாட்டு முடிவுகள் தொடர்பாக வெளிச் சக்திகளின் தலையீடுகளை ஏற்றுக்கொள்ள முடியாது என்று இலங்கை அரசு, ஐ.நா மனித உரிமைகள் சபையில் தெரிவித்துள்ளது.

ஜெனீவாவில் நடந்து வரும், ஐ.நா மனித உரிமைகள் சபையின் 42 ஆவது கூட்டத்தொடரில், இலங்கை இராணுவத் தளபதியாக லெப்.ஜெனரல் சவேந்திர சில்வா நியமிக்கப்பட்டமை குறித்து, இணை அனுசரணை நாடுகளும், பல அனைத்துலக அமைப்புகளும் கவலை வெளியிட்டிருந்தன.

குற்றச்சாட்டுக்கு உள்ளாகியிருக்கும் லெப்.ஜெனரல் சவேந்திர சில்வா இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்டமை, நல்லிணக்க மற்றும் பொறுப்புக்கூறல் முயற்சிகளைப் பாதிக்கும் என்றும் கருத்துக்கள் வெளியிடப்பட்டன.

இந்தக் குற்றச்சாட்டுகளுக்கு நேற்று முன் தினம் ஜெனீவாவுக்கான இலங்கைப் பிரதிநிதி ஏ.எல்.ஏ. அஸீஸ் பேரவையில் பதிலளித்து பேசினார்.

உள்ளக நிர்வாகச் செயல்முறைகளைப் பாதிக்கும் வகையில், இலங்கையின் பொதுச்சேவை பதவி உயர்வுகள், முடிவுகளில், வெளிப்புறச் சக்திகளின் தலையீடுகள் தேவையற்றவை. ஏற்றுக் கொள்ள முடியாதவையாகும்.

அண்மையில் இராணுவத் தளபதி நியமனம் தொடர்பாக எடுக்கப்பட்ட முடிவு, ஜனாதிபதியின் இறையாண்மைக்குட்பட்டது என்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டும்.

குற்றச்சாட்டுகளின் அடிப்படையில், சில இரு தரப்புப் பங்காளிகள் மற்றும் அனைத்துலக நிறுவனங்கள் இந்த நியமனம் குறித்து கவலைக்குரிய நிலைப்பாட்டை எழுப்புவது வருந்தத்தக்கது. இயற்கை நீதிக்கான கொள்கைகளுக்கு முரணானது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

# கனிமொழி எம்.பி. கொழும்பு வந்தார்



## ஹக்கீம் இல்ல திருமணத்தில் பங்கேற்க

கொழும்பு, செப். 13

தி.மு.க. மகளிர் அணி மாநிலச் செயலாளர் கனிமொழி எம்.பி இலங்கை வந்துள்ளார்.

அமைச்சர் ரவூப் ஹக்கீம் புதல்வியின் திருமண நிகழ்வில் கலந்து கொள்ள வந்துள்ள கனிமொழி எம்.பி. இங்கு தமிழ் அரசியல் முக்கியஸ்தர்கள் சிலரையும் சந்திக்கவுள்ளார்.

இதேவேளை, இந்திய யூனியன் முஸ்லீம் லீக் எம்.பி. பேராசிரியர் காதர் முகைதீன்,ராமநாதபுரம் எம்.பி. நவாஸ் கனி ,கேரள பொன்னானி எம்.பி. பஷீர் ஆகியோரும் இந்தத் திருமண நிகழ்வுக்காகக் கொழும்பு வந்துள்ளனர். (ஐ)

# எழுக தமிழை முன்னிட்டு செப். 16 முழு அடைப்பு

## தமிழ் மக்கள் பேரவை அழைப்பு

யாழ்ப்பாணம், செப். 13

தமிழ் மக்கள் பேரவையின் ஏற்பாட்டில் எதிர்வரும் செப்ரெம்பர் 16 ஆம் திகதி திங்கட்கிழமை வடக்கு – கிழக்கு உள்ளிட்ட தமிழர் தாயகம் தழுவியதாக எழுக தமிழ் – 2019 மாபெரும் எழுச்சிப் பேரணி யாழ்.மண்ணில் நடைபெற உள்ளது. அன்றைய தினம் வடக்கு – கிழக்கில் முழு அடைப்புப் போராட்டத்துக்கு பேரவை அழைப்பு விடுத்துள்ளது.

எழுக தமிழ் எழுச்சிப் பேரணிக்கு அனைவரது பங்கேற்பை உறுதிசெய்யும் வகையில் அத்தியாவசிய சேவைகள் தவிர்ந்த ஏனைய வர்த்தக நிலையங்கள், சந்தைகள், சிகை அலங்கரிப்பு நிலையங்கள், அரச, அரசசார்பற்ற மற்றும் தனியார் நிறுவனங்கள், பல்கலைக் கழகங்கள், பாடசாலைகள், உயர்கல்வி நிறுவனங்கள், தனியார் கல்வி நிறுவனங்கள் என்பவற்றை மூடியும், போக்குவரத்து சேவைகளை நிறுத்தியும் மீனவர்கள் தமது தொழிலுக்குச் செல்லாதும் ஒத்துழைப்பு வழங்குமாறு தமிழ் மக்கள் பேரவை கோரியுள்ளது.

அதேவேளை, அத்தியாவசிய, அவசர தேவை நிமித்தம் பயணிப்பவர்களதும், எழுக தமிழ் எழுச்சிப் பேரணியில் பங்கேற்று திரும்புபவர்களினதும் தேவைகளை ஈடு செய்யும் வகையிலான மருந்தகங்கள், வண்டி வாகனத் திருத்தகங்கள், எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மற்றும் உணவகங்கள் என்பவை வழமைபோன்று இயங்குவது அவசியமென்பதையும் பேரவை தெரிவித்துள்ளது.

தமிழ் மக்களின் உரிமைகளையும் அபிலாசைகளையும் வென்றெடுக்கும் வகையில் நடைபெறுகின்ற எழுக தமிழ் எழுச்சிப் பேரணி யில் அனைத்துத் தமிழ் உறவுகளும் ஓரணியில் ஒன்றுபட்ட குரலாக, தென்னிலங்கை தரப்புகளுக்கும், சர்வதேச சமூகத்திற்கும் இடித்துரைக்கும் வரலாற்றுக் கடமையில் அணியமாகும் வகையில் அன்றைய தினம் வழமை மறுப்பு நடவடிக்கையினை மேற்கொள்ள அனைத்து தரப்பினரும் ஒத்துழைக்க வேண்டியது ஒவ்வொரு தமிழர்களது கடமை என்பதையும் பேரவை சுட்டிக்காட்டியுள்ளது. (ஐ)



# கட்டுநாயக்காவில் நெரிசல்

கொழும்பு, செப். 13

போரா வருடாந்த சாவதேச மாநாட்டில் பங்கேற்பதற்காக இலங்கை வந்திருந்த போரா சமூகத்தினர், மீண்டும் தமது சொந்த நாடுகளுக்கு திரும்பிச் செல்லத் தொடங்கியுள்ளமையால் நேற்றுமுன்தினம் தொடக்கம் கட்டுநாயக்க விமான நிலையத்தில் பயணிகள் நெரிசல் ஏற்பட்டுள்ளது.

போரா மாநாட்டிற்காக 40 நாடுகளைச் சோந்த 21 ஆயிரத்துக்கும் அதிகமான போரா சமூகத்தவர்கள், அண்மையில் இலங்கை வந்திருந்தனர்.

இந்த மாநாடு முடிந்த நிலையில், போரா சமூகத்தினரில் ஒரு பகுதியினர் சுற்றுலாத் தலங்களைப் பார்வையிட்டு வருகின்றனர். மற்றொரு பகுதியினர் நாடு திரும்பி வருகின்றனர். இதனால், கட்டுநாயக்க விமான நிலையத்தில் நெரிசல் ஏற்பட்டுள்ளது.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் நிலவும் இடம் மற்றும் வசதிகள் போதியளவு இல்லாமையினால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக, குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இது போன்ற சந்தர்ப்பங்களின்போது, கட்டுநாயக்க விமான நிலையத்தில் பயணிகள் நெரிசலைத் தவிர்க்க முடியாது என்றும் அந்தப் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டார். (ஐ)



# ஐ.தே.கவுடன் தயாசிறி இரகசிய ஒப்பந்தமா?

## சந்தேகிக்கிறார் மஹிந்தானந்த



கொழும்பு, செப். 13

பொதுஜன பெரமுனவுக்கும் சுதந்திரக் கட்சிக்குமிடையில் இடம்பெற்றும் வரும் கூட்டணிப் பேச்சுகளுக்குத் தடை ஏற்படுத்தும் வகையில் கருத்து வெளியிட்டுவரும் சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர, ஐக்கிய தேசியக் கட்சியுடன் இரகசிய ஒப்பந்தமொன்றை கைச்சாத்திட்டுள்ளாரா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

சு.கவுக்கும் பொதுஜன பெரமுனவுக்கும் இடையில் சாதகமான பேச்சு நடைபெற்று வருகிறது. இரு தரப்புக்குமிடையில் இணக்கப்பாடுகள் எட்டப்பட்டுள்ளன. சின்னம் என்பது ஒரு பிரச்சினையில்லை. அதனை வைத்துப் போலிப் பிரச்சினையைச் சிலர் உருவாக்க முற்படுகின்றனர். சிலருக்குப் பேச்சு தொடர விருப்பம் இல்லை.

சு.கவைப் படுகுழியில் தள்ளி அதன் அதிகாரத்தைக் கைப்பற்றும் முயற்சியிலேயே அவர்கள் செயற்படுகின்றனர். மீண்டும் ஐ.தே.கவுடன் இணைந்து அவர்களால் பயணிக்க முடியாது. ஐ.தே.கவுடன் இணைந்து பயணித்தமையால்தான் சு.க. நாசமடைந்தது.

ஐ.தே.கவுடன் மீண்டும் இணைய முற்பட்டால் அவர்களுக்குஎதிர்காலமில்லை. சு.கவின் எதிர்காலம் பொதுஜன பெரமுனவில்தான் உள்ளது. தேர்தலுக்காக நாம் அமைக்கவுள்ள கூட்டணியின் பிரதான பதவிகளில் ஒன்றை சு.கவுக்கு வழங்க ஆலோசித்து வருகின்றோம். சு.கவின் தனித்துவத்தைப் பாதுகாப்பதில் உறுதியாகவுள்ளோம். ஆனால், கூட்டணிப் பேச்சுகளில் குழப்பம் ஏற்படும் வகையில் தயாசிறி போன்றோர் கருத்து வெளியிட்டு வருகின்றனர்.

தனிப்பட்ட அரசியல் நிகழ்ச்சி நிரலின் கீழ் ஐ.தே.கவுடன் இரகசிய ஒப்பந்தத்தில் அவர் கைச்சாத்திட்டுள்ளாரா எனத் தெரியவில்லை– என்றார். (ஐ)

# தனித்துப் போட்டியிட்டாலும் சுதந்திரக்கட்சி வெற்றி பெறும்

## அடித்துக் கூறுகின்றார் குமார வெல்கம

கொழும்பு, செப். 13

ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வேறெந்த கட்சியுடனும் கூட்டணி அமைத்துப் போட்டியிடவேண்டிய அவசியமில்லை என்றும், தனித்துப் போட்டியிட்டாலும் சுதந்திரக் கட்சியால் வெற்றி பெறமுடியும் என்றும் நம்பிக்கை தெரிவித்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கூட்டணி அமைக்காமல் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியால் தேர்தலில் வெற்றி பெற முடியும் என்று எனக்கு முழுமையான நம்பிக்கை இருக்கிறது. நாட்டைப் பற்றியும், கட்சியைப் பற்றியும் சிந்தித்தால் நாம் தனித்தே போட்டியிட வேண்டும்.

சுதந்திரக் கட்சி – பொதுஜன பெரமுன கூட்டணி அமைப்பதில் சின்னம் குறித்து இரு தரப்பிலும் கருத்து முரண்பாடுகள் காணப்படுகின்றமை அறிய முடிகிறது. ஆனால் தற்போது கட்சியோ சின்னமோ முக்கியத்துவமல்ல. நாட்டைப் பற்றியே சிந்திக்க வேண்டியுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சின்னமான வெற்றிலைச் சின்னத்தில் பொதுஜன பெரமுன போட்டியிடத் தீர்மானித்தாலும் எனக்கு அதில் திருப்தியில்லை. காரணம் யாருடனும் கூட்டணி அமைப்பதை நான் விரும்பவில்லை.

ஏனைய சிறு கட்சிகளுடன் இணைந்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஜனாதிபதித் தேர்தலில் தனித்துப் போட்டியிடவேண்டும் என்பதே எனது நிலைப்பாடாகும். அவ்வாறு தனித்துப் போட்டியிட்டாலும் நிச்சயமாக வெற்றி பெற முடியும் – என்றார். (ஐ)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிரஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 13.09.2019 இல் வெளியிடப்பெற்றது.